விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 18 செவ்வாய்க்கிழமை (04.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 290

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே



# நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் 'எழுக தமிழ்' பேரணியைத் தடுத்திருப்பேன்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த கொதிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்காது காலத்தை கடத்திவரும் மைத்திரி - ரணில் அரசாங்கம், தமிழ் மக்களை திசைத் திருப்புவதற்காகவே வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைப் பயன்படுத்தி எழுக தமிழ என்ற பெயரில் இனவாதத்தை தூண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய பிரத்தியேக ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை

23ஆம் பக்கம் பார்க்க....

அன்பார்ந்த வலம்புரியின் விற்பனை முகவர்களே!

நாளுக்கு நாள் வலம்புரியின் விற்பனை அதிகரித்த வண்ணம் உள்ளது. எனவே அதிகரிக்கும் தொகையை முன்கூட்டியே அறியத் தருமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். உடனடியாக அதிகரிக்கும்படியான உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதில் சிரமங்கள் இருப்பதால் இவ்வறிவித்தலை தயவுடன் கடைப்பிடிக்கவும்.

விற்பனை முகாமையாளர் – வலம்புரி

## இராணுவ பாதுகாப்பு வழங்கத் தயார்!

(கொழும்பு)

அரசியல் தலைமைகளுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படக்கூடாது என்ற கட்டாயம் உள்ளது.

எனினும் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாயின் அவருக்கான சிவில் பாதுகாப்பில் திருப்தி இல்லையெனின் இராணுவ பாதுகாப்பை வழங்க தயார் என பாதுகாப்பு தரப்பு தெரிவித்துள்ளது.

வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் மீதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் தெற்கின் இனவாத நகர்வுகளும் அதன் மூலமாக விக்னேஸ்வரனின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் கூறப்படும் நிலையில்,


அவருக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு தரப்பின் நகர்வுகளை

24ஆம் பக்கம் பார்க்க...

# இனப்பாகுபாடுகள் தொடரும் நிலையில்

# தமிழர்களுக்கு கிடைக்கப் பெறும் அரசியல் தீர்வு சந்தேகமானதே!

## சுவிஸ் நீதியமைச்சரிடம் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

நாட்டில் இன ரீதியான பாகுபாடுகள் தற்போதும் தொடரும் நிலையில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கான நீடித்த அரசியல் தீர்வைப் பெற்றுத் தருமா? என்பது சந்தேகமாகவே உள்ளது என சுவிட்சர்லாந்து நீதியமைச்சரிடம் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர், தமிழ் மக்களின் மனங்களில் உள்ளவற்றை கூறுவதற்கே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(23-ம் பக்)

### புனர்வாழ்வளித்து விடுவிப்பதாக

## பெயர் குறிப்பிட்ட 23 கைதிகளில் இருவருக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிப்பதாக பெயர் குறிப்பிடப்பட்ட 23கைதிகளில் இருவருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் சிறைதண்டனை வழங்கப்பட்டுள்ளது

பல வருடங்களாக சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 23 பேரை 6 மாதங்கள் புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யவுள்ளதாக அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான விபரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கோ நீதிமன்றுக்கோ அறிவிக்கப்படாத நிலையில் மேற்குறித்த சிறைத்தண்டனை கொழும்பு நீதவான் நீதிமன்றால் கடந்த வெள்ளி

24ஆம் பக்கம் பார்க்க...

## மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

(பரந்தன்)

கிளிநொச்சி - இரணைமடு குளத்தின் அபிவிருத்தி பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இரவு பகலாக இரணைமடுகுளத்தின் புனரமைப்பு பணிகள் இடம்

02ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கு முதலமைச்சருக்கான பாதுகாப்பை அதிகரியுங்கள்

### மாவை சேனாதிராசா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் அவரது பாதுகாப்பை பலப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என தமிழரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு மாவை. சேனாதிராசாவினால் அனுப்பிவைக்

02ஆம் பக்கம் பார்க்க....

## அரசுக்கெதிரான மனு தள்ளுபடி

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

குறித்த மனுவை, ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி சரத் வீரசேகர மற்றும் பேராசிரியர் விமலநர்ம

02ஆம் பக்கம் பார்க்க...

# பெயர் பலகைகளை அகற்றி விட்டு அவற்றை மீளத்திறந்து வைப்பது எனது கொள்கையல்ல

## முன்னாள் தலைவர்களின் கருத்துக்கு ஜனாதிபதி பதில்

(பொலநறுவை)

முன்னாள் தலைவர்கள் ஆரம்பித்த திட்டங்களின் பெயர்ப்பலகைகளைக் அகற்றி தமது பெயரைச் சேர்த்து அவற்றை மீண்டும் திறந்து வைப்பது தனது கொள்கையல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்தார்.

அரசு புதிதாக எதனையும் மேற்கொள்ளவில்லையென முன்னாள் தலைவர்கள் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தும் கருத்துக்களுக்கு ஓராண்டு காலமாக பதில் அளிக்காதிருந்த போதிலும் மீண்டும் அக்கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதனால்

23ஆம் பக்கம் பார்க்க....



## வெளிநாடு பயணிக்க கோத்தாவுக்கு அனுமதி

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாடு செல்ல கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

அவன்கார்ட் எனும் தனியார்நிறுவனமொன்றுக்கு ஆயுதக் களஞ்சியமொன்றை நடத்த அனுமதி வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வடக்கு முதலமைச்ச...

கப்பட்ட கடிதம் வருமாறு,
வடக்கு மாகாணசபை முதல்வர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சென்ற முதலாம் திகதி (01.10.2016) இலங்கை அரசியல் யாப்பு நூல் தொடர்பான கூட்டத்திற்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் "எனது உயிருக்கும் உலை வைக்கப் பார்க் கிறார்கள்" என்றும் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப்புலிகளைச் சாட்டி விக்கியைக் கொல்லச் சதியாம்" குறிப்பாக "தமிழ் அரசியல்வாதிகள் சிலர் வடக்கு முதலமைச்சருக்கு எதிராகக்கூட்டுச் சதி" என்றெல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. நீதியரசர் விக்னேஸ்வரன் தனது உயிருக்கு ஆபத்து என்று குறிப்பிடுவாரேயானால், இச் செய்தி, அத்தகைய முயற்சிகளிருப்பின், சதியிருப்பின் அது ஒரு பாரதூரமான விடயமாகும்.

எனவே தாங்கள் உடன் இந்த விடயத்தை ஜனாதிபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் முறையிட வேண்டும். பூரண விசாரணை மேற்கொண்டு அவ்வாறு யாரும் செயற்படுவது பற்றித் தெரிந்தால் உடன் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நட வடிக்கைக்கு உட்படுத்த வேண்டும். அத்துடன் முன்னாள் நீதியரசராகவும் தற்போதைய வடக்கு மாகாண முதலமைச்சராகவும் உள்ள சி.வி.விக்னேஸ்வரனுக்கு உயிர்ப்பாதுகாப்புக்கான பாதுகாப்புப் போதுமானளவு வழங்கப்படவும் வேண்டும். இதனால் நாமெல்லாம் பாதுகாப்பாக இருக்கிறோம் என்பது அர்த்தமல்ல. எவ்வாறெனினும் இவ்விடயத்தில் காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி தங்கலஷ்சுமி குமாரசாமி



ஜெயசன்யன் நிறுவனத்தின்
உரிமையாளரும், பிரபல
சமய சமூக சேவையாளருமான
திரு க.சண்முகநாதன்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி தங்கலஷ்சுமி
குமாரசாமி அவர்கள்
சிவபதமடைந்தமையிட்டு
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பே சிவம்

**அகில இலங்கை சைவ மகா சபை**

(6113)


## சரவணா ரெக்ஸ்

நல்லூர்.

**(வேறு கிளைகள் இல்லை)**



October – 6ம் திகதி ஆசிரியர்
தினத்தை முன்னிட்டு இம்மாதம்
4ம்,5ம்,6ம்,7ம்,8ம் ஆகிய
தினங்களில் Office Wear
சாறிகள் புத்தம் புதிய
தெரிவுகள் மலிவு விற்பனைக்கு.

**சரவணா ரெக்ஸ்**

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம்.


## மின்சாரம் தாக்கி...

பெற்று வருகின்றன. இந்த நிலையில் இப் பணியில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த கனகராசா கோபிநாத் (வயது 22) என்பவரே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-312)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## அரசுக்கெதிரான...

அபேவிக்கிரம ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், நீதியரசர் சிசிரடி ஆப்ரூ மற்றும் நீதியரசர் உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தை ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் இணைந்தே உருவாக்கியுள்ளது. ஏனைய கட்சிகள் அதில் பங்கேற்கவில்லை என குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே இது ஒரு தேசிய அரசாங்கமாக இருக்க முடியாது எனவும் மனுதாரர்கள் விவாதித்திருந்தனர்.

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பிலான விவாதம் முன்னதாகவே நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டதுடன் சபாநாயகர் அனுமதியும் வழங்கியுள்ளார்.

எவ்வாறாயினும், சபாநாயகர் இதற்கான தீர்மானத்தை வழங்கியுள்ளதால் இந்த வழக்கு நிராகரிக்கப்படுகிறது என உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## மணி விழா வாழ்த்துக்கள்

உயர்திரு. சுப்பையா
**சண்முககுமார்**
SLPS - I
(கோட்டக்கல்விப் பணிப்பாளர் –
யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அலுவலகம்)



இணுவையூரில் குடிகொண்டு கோண்டாவில்
இந்துவில் இறுதியாய் அதிபராகி யாழ்ப்பாணம்
கோட்டத்திற்கு பணிப்பாளராய் ஐந்தாண்டுகள்
சிறப்புறபணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும்
உயர்திரு. சு. சண்முககுமார் அவர்களின் இன்றைய பிறந்த
நன் நாளிலே அவர்தம் சேவையை பாராட்டி வாழ்த்துவதோடு ஓய்வு
காலத்தில் குடும்பத்தினருடன் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

திருமதி R. ஜோன்சன் ராஜ்குமார்
திருமதி N. இரகுலேசன்
திரு. K. உமைபாலன்
திரு. N. ஸ்ரீமுருகதாஸ்காந்தன்
திருமதி S. செல்வரத்தினம்
திருமதி P.E.J. டொறிங்ரன்

கோட்டக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

பிறந்த திகதி
26 . 06 . 1931



இறந்த திகதி
01 . 10 . 2016

**சிவஸ்ரீ.**
**பூரண தியாகராஜக் குருக்கள்** B.A(Hons)
(வியாகரண சிரோண்மணி)
- கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

சிவபூதவராஜர் தேவஸ்தானத்தின் பிரதமகுரு தி.ஜோதிநாதக்
குருக்கள் அவர்களின் மாமனாரும் லதா அம்மாவின் தந்தையாருமாகிய
சிவஸ்ரீ. பூரண தியாகராஜக் குருக்கள் 01.10.2016 அன்று இறைபதம்
எய்தினார். அவரது இறுதிக்கிரியைகள் 04.10.2016 இன்று
மட்டக்களப்பில் நடைபெறும்.

இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கோண்டாவில் வடக்கு சிவபூதவராஜர் தேவஸ்தானம், கோண்டாவில் வடக்கு வீரபத்திரர் தேவஸ்தானம், கோண்டாவில் வடக்கு பத்திரகாளி கோயில் தேவஸ்தானம், கோண்டாவில் வடக்கு தில்லைக் காளி கோயில் தேவஸ்தானம், கோண்டாவில் வடக்கு கலைவாணி சனசமூக நிலையம், கோண்டாவில் வடக்கு மாதர் சங்கம், கோண்டாவில் வடக்கு ஐக்கிய நாணய சங்கம், கோண்டாவில் வடக்கு சிறுவர் கழகம், கோண்டாவில் வடக்கு விளையாட்டுக் கழகம், கோண்டாவில் வடக்கு வாழ் மக்கள்.

(6111) சிவன் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.


## கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஓர் நற்செய்தி!



உங்கள் ரி.சி.ரியில் யாழ்ப்பாண
பிரதேச செயலகத்திற்குட்பட்ட எதிர்கால செல்வங்களின்
ஆரோக்கியத்திற்கான October, September
மாதங்களுக்குரிய உணவு விநியோகம் ஆரம்பம்.
உங்கள் 2000 ரூபாய் உணவு முத்திரைக்கு
தரமானதும் மலிவானதும் சுகாதாரமானதுமான
உணவுகளை சத்துணவு ஆலோசகரின்
அறிவுறுத்தலுக்கமைய ஒரே கூரையின் கீழ் சுயதெரிவு
முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

ரி.சி.ரியில் உங்கள் உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதன் மூலம்.

1. உடனடி அன்பளிப்புக்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. தொடர்ச்சியாக 8 மாத கொள்வனவை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு இறுதியில் 500 ரூபாய் பெறுமதியான அன்பளிப்பு கூப்பன் வழங்கப்படும்.

சிந்தியுங்கள் செயற்படுங்கள் எதிர்காலசந்ததியினரை மேம்படுத்துங்கள்.

Note:July, August மாதங்களுக்குரிய உணவு விநியோகம் 6ஆம் திகதியன்று முடிவடைகிறது


"அறப்பணியே முதற்பணி"

**T.C.T Multi Trade Centre,**
**No: 527, Navalar Road,**
**Nallur, Jaffna.**
**T.P. 021 745 1895**

(5063)

# வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிராக கொழும்பில் விமலின் கட்சிப் பெண்கள் போராட்டம்





யாழில் எழுக தமிழ் பேரணியில் முதலமைச்சர் தெரிவித்த கருத்துகளுக்கு கண்டனம் தெரிவித்து நேற்று கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்தினை மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் மகளிர் பிரிவினர் முன்னெடுத்துள்ளதுடன். ஐம்பது பேர் வரையிலான பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற எழுக தமிழ் பேரணியில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களை முன்வைத்துள்ளதாக குற்றம் சாட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள். இந்த கருத்துக்களை அவர் மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தின் போது தற்போதைய மைத்திரி - ரணில் தலைமையிலான இலங்கை அரசாங்கம் மேற்குலக நாடுகளை திருப்திபடுத்துவதற்காக நாட்டை பிளவுபடுத்தும் வகையில் புதிய அரசியல்யாப்பை தயாரித்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-7)

# 13வது அரசியல் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வு

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

*13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரத்தை பகிரும் புதிய அரசியலமைப்பு திருத்தத்தை அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.*

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே முதன் முறையாக இந்த யோசனையை முன்வைத்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

# நிறைவேற்று அதிகாரம் இரத்து; மீளாய்வு செய்யப்பட வேண்டும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க சுட்டிக்காட்டு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டுமென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அச்சுறுத்தல் மிகுந்த நடவடிக்கைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது குறித்து மீள சிந்திக்க வைக்கின்றது என அவர் தெரிவித்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதனால் பிரிவினைவாதிகளுக்கு தமது இலக்கினை எட்ட இலகுவாக வழி கிடைக்குமா? என கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்வது குறித்து தந்திரோபாய ரீதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள அவர் விக்னேஸ்வரன் போன்றவர்களினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை எந்தவொரு பொறுப்புணர்ச்சியுடைய அரசியல் கட்சியும் உதாசீனம் செய்யாது என தெரிவித்தார்.

இன ரீதியாக நாடு பிளவுபடாதிருப்பதனை தடுக்கும் ஒரே சக்தியாக தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமர் நியூசிலாந்திலிருந்து இந்தியாவுக்கு இன்று பயணம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இந்தியாவின் தலைநகரான டில்லி நகருக்கு செல்லவுள்ளார்.

தற்பொழுது நியூசிலாந்துக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் நியூசிலாந்திலிருந்து டில்லிக்கு வருகை தரவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த விஜயத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களை பிரதமர் சந்திக்கவுள்ளார். நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்திய பொருளாதார மாநாட்டில் பிரதமர் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர்பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டிஜிற்றல் தொழில்நுட்பத்தால் 68 இலட்சம் ரூபாய் இலாபம்

டிஜிற்றல் தொழில்நுட்பம் காரணமாக மீன்பிடித்துறைமுக அபிவிருத்தி அதிகார சபை 68 இலட்சத்தை இலாபமாகப் பெற்றுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த இலாபம் கடந்த 9 மாதங்களில் பெறப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு மேலும் கூறியுள்ளது.

இலங்கையில் 21 மீன் பிடித் துறைமுகங்கள் காணப்படுவதோடு. இவை அனைத்திற்கும் இந்த வருடத்திற் குள் டிஜிற்றல் தொழில்நுட்ப முறை அறிமுகப்படுத்தப்படும் எனவும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.


விசேடமாக மீன்பிடித்துறைமுகங்களில் இடம்பெறும் முறைகேடுகள். ஊழலினை ஒழிக்கும் நடவடிக்கையாக இந்த டிஜிற்றல் தொழில்நுட்ப முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் மீன்பிடி படகுகளுக்கு தேவையான எரிப் பொருள். மின்சக்தி. நீர் வசதி உள்ளிட்ட காரணங்கள் மற்றும் மீன்பிடி படகு களை பதிவு செய்தல் என்பவற்றில் ஒழுங்கு முறையை பேணுவதற்கும் இந்த தொழில்நுட்பம் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீன்பிடி படகுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யாதுவிடின் அது தொடர்பில் படகுகளின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன், அவ்வாறும் பதிவு செய்யத் தவறும் பட்சத்தில் குறித்த படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அனுமதி வழங்கப்படாது எனவும் மீன்பிடி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# ஓம் சற்குரு ஶ்ரீசரவணபாபா சுவாமிகளின் 37ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு லண்டன் ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளை நிதியத்தினால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் அறப்பணிகள்...















**ஓம் சற்குரு ஶ்ரீசரவணபாபா சுவாமிகள்**

லண்டன் ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளை நிதியத்தினால் முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியத்தின் பயனாளிகளுக்கு 1000000 ரூபாய் பெறுமதியான 37 துவிச்சக்கரவண்டிகள், 118 குடும்பங்களுக்கு உடு புடவைகள் மற்றும் 108 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

ஓம் சற்குரு ஶ்ரீசரவணபாபா சுவாமி அவர்களின் 37ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு லண்டன் ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளை நிதியத்தினால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க பிரிவில் உள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ 1851 குடும்பங்களை கொண்ட அமைப்பாக அமரா பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் ஒன்றியத்தை சேர்ந்த தெரிவு செய்யபட்ட பயனாளிகளுக்கு இனிய வாழ்வு இல்ல மண்டபத்தில் வைத்து இவ் அறக்கொடை நிகழ்வு 01.10.2016 அன்று நடைபெற்றது. இவ் நிகழ்வின் போது பயனாளிகள் வட்டு இந்து வாலிபர் சங்கத்தினர் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதுபோன்று கடந்த வருடம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் சங்கத்தின் திருமண மண்டபத்தில் யாழ் மாவட்ட விழிப்புலனற்றவர்களுக்கும் கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு மண்டபத்தில் வன்னி விழிப்புலனற்றோருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்தில் வைத்து முல்லைத்தீவு மாவட்ட இல்லங்களுக்கான அறக்கொடை நிகழ்வும் என கடந்த மாசி மாதம் லண்டன் ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளை நிதியத்தினால் சுமார் 22 இலட்சம் பெறுமதியில் அறக்கொடை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் இல்ல சிறார்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள், இல்லங்களுக்குத் தேவையான பொருட்கள், பாரதி இல்ல தேவைக்காக மோட்டார் வண்டி, யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு ஒலிக்கருவிகள், சீருடைத் துணிகள் பார்வையற்ற மாணவர்களுக்கான ஒலிப்பதிவு• கருவிகள் மற்றும் மருத்துவ உதவிகள், உணவுகள் என்பன வழங்கப்பட்டன. தொடர்ச்சியாக வட்டு இந்து வாலிபர் சங்கத்துடன் இணைந்து போரினால் பாதிக்கப்பட்ட எமது தாயக உறவுகளுக்காக லண்டன் ஓம் சரவணபாபா சேவா அறக்கட்டளை நிதியம் பல்வேறு மனிதாபிமான அறக் கருமங்களை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



















தவராஜா நவீந்திரன்
கல்வி சமூக மேம்பாட்டு பொறுப்பாளர்
வட்டு இந்து வாலிபர் சங்கம்










## வீதியை மறித்து போராட்டம்

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாழைமடு, செம்பிக்குளம், பனிச்சங்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள், கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்னால், நேற்று திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில், தடைசெய்யப்பட்ட விவசாய உரமானியங்களை வழங்குவதுடன், விண்ணப்பித்த விவசாயிகள் 873 பேருக்கு உரமானியத்தை வழங்குமாறும், காணிக் கச்சேரி நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல், தரிசு நிலமாக இருக்கும் காணிகளில் விவசாயம் செய்ய அனுமதிக்குமாறும் கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேலும், இதனை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கிண்ணியா பிரதேச செயலாளர் முன்னிலையில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. தங்களுக்கான தீர்வு கிடைக்கப் பெறாத பட்சத்தில் தங்களது போராட்டம் தொடரும் என விவசாயிகள் கோஷங்களை எழுப்பினர். (செ)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புடைவை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் இருவர் தேவை. வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும் நேரில் சமுகம் தரவும்.

**லைடன் புடைவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C-5959)

# இலங்கையில் 2436 எயிட்ஸ் நோயாளர்கள்
## உலகளவில் 1.1 பில்லியன் பேர்

இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றிய 2436 பேர் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சுகாதார சேவைப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி. தொற்றியவர்களுக்கும் இலவசமாக சிகிச்சை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களுக்காக நாடு முழுவதிலும் 30 நிலையங்களும், 22 நடமாடும் சிகிச்சை நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

எச்.ஐ.வி. தொற்றியவர்கள் 2015 ஆகும் போது உலகளவில் 36.7 மில்லியன் பேர் கண்டறியப்பட்டுள்ளனர். இதுவரை 1.1 மில்லியன் எயிட்ஸ் நோயாளர்கள் சர்வதேச ரீதியில் உயிரிழந்துள்ளதாகவும் டாக்டர் பாலித மஹிபால மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு நகரில் நாள்தோறும் 800 தொன் குப்பைகள் தேக்கம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் நாள்தோறும் சுமார் 800 தொன் எடையுடைய குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்ற நேரிடுவதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இவ்வளவு பாரியளவு குப்பை மற்றும் கழிவுகளை அகற்றுவதில் சிரமங்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ளது.

இந்தக் கழிவுகளை அகற்றுவதற்காக நாள்தோறும் 80 பாரவூர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

நகரில் நிரந்தரமாக வாழ்ந்து வரும் ஐந்தரை இலட்சம் மக்களுடன், தொழில் நிமித்தம் மற்றும் வேறு தேவைகளுக்காக நாள்தோறும் வரும் ஆறு இலட்சம் மக்கள் ஆகியோரை இணைத்தால் கொழும்பில் சுமார் 12 இலட்சம் மக்கள் தங்கியிருக்கின்றார்கள்.

நகர மக்களின் வீட்டுக் கழிவுகள், நகருக்கு வருவோரினால் வீசப்படும் கழிவுகள் ஆகியனவற்றின் ஊடாக சுமார் 800 தொன் கழிவுகள் சேர்கின்றன.

நாள்தோறும் சந்தைகளுக்கு வரும் மரக்கறி, பழ பாரவூர்திகள் ஊடாகவும் குப்பைகள் மற்றும் கழிவுகள் சேர்வதாக கொழும்பு நகர சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு சேரும் குப்பைகளை அகற்றுவதற்கு இதுவரையில் ஓர் உரிய இடம் கிடைக்காமை பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதாக நகரசபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் செல்வக்குமார் ஜெயந்தி**

தோற்றம்: 03.03.1972
மறைவு:- 04.09.2016



அன்போடும் பண்போடும்
அனைவரையும் நேசித்து பண்பின் சிகரமாய்
அவனியில் என்றும் புகழாய் வாழ்ந்து
எங்கள் அன்புத் தெய்வத்தினை
இழந்து முப்பத்தொரு நாட்கள்
ஓடி மறைந்தாலும் என்றும் உங்கள் நினைவுகளோடு
நாம் வாழ்ந்திடுவோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

04.10.2016 இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
82, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**அன்பு வாசகர்களே!**
**உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்**

நீங்கள் அறிந்த
◆செய்திகள்
◆புகைப்படங்கள்
◆நிகழ்வுகள்
◆பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
**076 636 3378**

Viber


## இராசி பலன்

4.10.2016
(புரட்டாதி 18, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
திருதியை முற்பகல் 11.00 மணிவரை
விசாகம் முழுவதும்
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி இரவு 1.21 மணிக்கு விருச்சி-சந் | | |
| | | | ராகு |
| செவ் | சனி | சந் சுக் | குரு சூரி புத |

**மேடம்:** விருப்பங்கள் நிறைவேறும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், பகைவர்கள் விலகுவர், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் மணியான செய்திகள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார நலனுண்டு, மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும்.

**கடகம்:** தொழிலில் புதிய முதலீடுகள் செய்வதற்கான வாய்ப்புண்டு, மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், வாகன சுகமுண்டு.

**சிம்மம்:** ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும்.

**கன்னி:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**துலாம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு.

**விருச்சிகம்:** வீட்டுப்பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைத்து மகிழும் நாள், தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வீண்பழிகள் அகலும், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மீனம்:** உடல்நலனில் கவனம் தேவை, எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

# இரகசிய சந்திப்பின் மூலம் சமஷ்டியைப்பெற முடியாது

## அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தோடு இரகசிய பேச்சு நடத்தி தந்தை செல்வாவாலேயே முடியாமற்போன சமஷ்டியை பெற்றுவிட முடியும் என்று எவரும் தமிழர்களின் காதுக்குப் புதிதாகப் பூவைக்க வேண்டிய அவசியம் இல்லை. பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட அழுத்தமே இலங்கை அரசைப் பணியவைக்கும். இனிவேறு வழிகளில், பிராந்திய, உலகளாவிய முன்னெடுப்புகளூடாக அந்த அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுத்து, பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைக்கு இலங்கை அரசைக் கொண்டுவந்தால் மாத்திரமே சம்ஷ்டி சாத்தியமாகலாம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

மூத்த அரசியல் ஆய்வாள்ர் மு.திருநாவுக்கரசின் நூல் வெளியீடு கடந்த முதலாம் திகதி யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சாட்சியங்கள் அற்றபோர் அல்ல வன்னியில் நடந்தேறிய இன அழிப்புப் போர். 40 நாடுகளின் சாட்சியம் உண்டு. அவற்றில் கணிசமானவை வெளிவரும். விக்கிலீக்ஸில் வந்தவையும், ஹிலாரி கிளின்டனின் மின்னஞ்சல்களில் இருந்துவர வேண்டியவையும் என்று பல தொடர்பாக நாம் அறிந்திருக்கிறோம். இன்னும் பல இருக்கின்றன. அவையும் வரும். ஐரோப்பாவில் தடையைக் கொண்டு வந்து பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போட்ட பிரித்தானியா இன்று ஐரோப்பிய யூனியனுக்குக்கு வெளியே.

உலகம் நீதியின் அச்சில் இயங்கவில்லை என்பதை மீண்டும் நாம் முள்ளிவாய்க்காலில் உணர்ந்து கொண்டோம். ஆனாலும், உலகம் தொடர்ச்சியாக அநீதியின் அச்சிலேயே இயங்குவதில்லை



என்பதும் வரலாறாகும்.

இது ஈழத்தமிழர் விடயத்திலும் உணர்த்தப்பட்டு வருகிறது. உணர்த்தப்படும் என்று நான் ஆழமாக நம்புகிறேன். அமெரிக்காவில் அடுத்து தேர்தல். அங்கே என்ன நடக்கப்போகிறது. விரைவில் தெரிந்துவிடும். முள்ளிவாய்க்காலில் முழுத் தமிழ் உலகமும் எழுந்துநின்றபோதும் இரு திக்கணங்களிலும் சர்வதேசம் எம்மைவந்து காப்பாற்றும் என்று எதிர்பார்த்துக் கிடந்த எமது மக்களுள் நானும் ஒருத்தியாக இருந்திருக்கிறேன்.

உலகின் பொய்மைத் தலைவர்களின் மாற்றத்திற்கான குரல் முள்ளிவாய்க்கால் இன அழிப்பைதடுத்து நிறுத்தத் தவறியது.

உண்மையில் வன்னியில் ஈழத்தமிழர்கள் தோற்கவில்லை. உலகமானுடமே அங்கு தோற்றது. இதை நிச்சயம் வரலாறு பதிவுசெய்யும். முற்கூட்டியே சொல்வது கட்டியம். நடந்து முடிந்தபின் எழுதப்படுவது வரலாறு. கட்டியங்களுக்கும் வரலாறுகளுக்கும் அப்பால் போராட்டம் என்பது உண்மையாலும், நம்பிக்கையாலும், துணிவாலும் கட்டப்படுவது. கட்டியங்களுக்கும் வரலாற்றுக்கும் இடைநடுவில் செயற்படுபவர்களே அரசியல்வாதிகளும் அரசியற் போராளிகளும்.

சில ஒருதலைப்பட்சமான கட்டியங்களையும் கற்பனைகளையும் வைத்துக்கொண்டு வரலாற்றுச் சில்லைமீண்டும் பின்னோக்கிச் சுற்றிக் கொண்டிருந்தால் எம்மைப்போன்ற ஒரு சிறிய தேசிய இனம் கட்டமைப்பு, பண்பாட்டு இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வேகமாக அழிக்கப்பட்டுவிடும்.

சர்வதேச விசாரணை நடந்து முடிந்துவிட்டது என்று வியாக்கியானம் கொடுத்த சட்டத்தரணிகளுக்கு இது புரியாது.

இலங்கை அரசின் கட்டமைப்பு இந்தியாவுக்கு எதிரான முனைப்போடு செயற்படுகிறது என்ற செய்தி இந்த ஆய்வு நூலில் முன்வைக்கப்படுகிறது.

அதேவேளை, இந்திய அரசின் இந்துத்துவமும், சிங்கள அரசின் தேரவாத பௌத்தமும் ஒத்திசைவோடு இயங்குகின்றன. சமயங்களைவைத்துச் சண்டையில் ஈடுபட்டிருக்கும் மேற்குலக நாடுகளும் இங்கு ஒத்திசைவோடு இயங்குகின்றன. அடிமட்டத்தில் மக்களாகிய நாம் இதன் சூட்சுமங்களைப் புரிந்தவாறு எமக்குள் ஒத்திசைந்து இயங்கவேண்டும்.

இலங்கை அரசாங்கத்தோடு இரகசிய பேச்சு நடத்தி தந்தை செல்வாவாலேயே முடியாமற்போன சமஷ்டியை பெற்றுவிட முடியும் என்று எவரும் தமிழர்களின் காதுக்குப் புதிதாகப் பூவைக்க வேண்டிய அவசியம் இல்லை.

உண்மை என்னவென்றால் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பாற்பட்ட அழுத்தமே இலங்கை அரசைப் பணியவைக்கும். இதை ஆயுதப் போராட்டம் செய்து முடிந்தாயிற்று. இனிவேறு வழிகளில், பிராந்திய, உலகளாவிய முன்னெடுப்புகளூடாக அந்த அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுத்து, பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைக்கு இலங்கை அரசைக் கொண்டுவந்தால் மாத்திரமே சமஷ்டி சாத்தியமாகலாம்.

இதற்கான வேலைத் திட்டத்தை வகுப்பதற்கு உலகளாவிய தமிழர்கள் ஒன்றித்துச் சிந்திக்கவேண்டும். வல்லாதிக்கங்களின் பிடியில் இருந்து விடுபட்டு சுயாதீனமாகச் சிந்திக்கவேண்டும். இதைப் போன்ற ஆய்வு நூல்கள் இன்னும் பல சுயாதீனமாக வெளிவரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# சிறுவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜே/101 பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உதவியாளர், கிராம சேவை உத்தியோகத்தர், பொதுமக்கள் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர், சிறுவர் கௌரவிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ரி.சிவதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் பி.வாகீசன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே.நந்தகுமார், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பி.ஜெசிதரன், யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.உமாசுதன், யாழ். மாவட்ட தாய்.சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.குணதாசன், பிராந்திய தொற்றுநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவகணேசன், யாழ். மாநகர சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி அ.ஸ்ரீகுமார், யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் என்.முகுந்தன், யாழ்.இந்து ஆரம்ப பப்பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா, கௌரவ விருந்தினர்களாக யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் வே.அன்பழகன், ஜே/101 கிராம உத்தியோகத்தர் க.பஞ்சலிங்கம், யாழ். மாநகர சபை பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி.ச.திவ்வியகுமார், ஒய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.இரகுநாத முதலியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மணி விழாவும் மலர் வெளியீடும்

இணுவில் சண்முக மணிவிழாச் சபையின் ஏற்பாட்டில் யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சண்முககுலகுமார் ஆகியோரது மணி விழாவும் மலர் வெளியீடும் (சண்முக கலசம்) இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவிலடியிலுள்ள அறிவாலய மண்டபத்தில் இடம் பெறும்.

சண்முக மணிவிழாச் சபைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் சண்முக கலசம் மலர் வெளியீட்டுரையினை யாழ்.பரமேவரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்துவார்.

ஓய்வு நிலை கணக்காளர் எஸ். சோதிலிங்கம், ஓய்வு நிலை ஆசிரியர் எஸ்.சிவகுமார் ஆகியோர் நூலினை வெளியிட்டு வைக்கவுள்ளனர். (இ-3)

# கழிவுப் பொருட்கள் அகற்றல்



(கரணவாய்)

கரணவாய் மண்டான் - உப்புறோட் பகுதியில் கொட்டப்பட்டிருந்த கழிவுப் பொருட்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சேரும் கழிவுகள் கொட்டப்படுவதற்காக இடம் ஒன்று ஒதுக்கப்பட்டு அதற்கு நான்கு பக்கமும் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவற்றை விட்டு வெளியில் கொட்டப்பட்ட கழிவுகள் காற்றில் பறந்து பயிர்ச் செய்கை நிலங்களில் பரந்து காணப்பட்டன.

இவற்றை அகற்றுவதற்கு கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி , பிரதேச சபை செயலாளர் எ.வினோராஜ், சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதேஸ்குமார், கரவெட்டி ஒன்றியத் தலைவர் உபாலிபொன்னம்பலம், நெல்லியடி வர்த்தக சங்க செயலாளர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மாதர் சங்கத்தினர் சுகாதாரப் பகுதியினர் இணைந்து இச் சிரமதானப் பணியை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர்.

சிரமதானப் பணியினை மேற்கொண்டோருக்கு நெல்லியடி வர்த்தக சங்கம், பிரதேச சபையினர் குளிர்பானங்களை வழங்கினர். (இ-60)

# புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கு தெல்லிப்பழையிலும் நடைபவனி ஆரம்பம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைச் சமூகத்தினரதும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினதும் ஏற்பாட்டில் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் இருந்து நடைபவனி ஆரம்பமாகி, யாழ்.வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடையும்.

தெற்கே தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கே பருத்தித்துறைக்கு களேஸ் ஒவ் கரீஜ் நிதியத்தினர் 28 நாள் நடைபயணத்தை மேற்கொண்டு பெறப்பட்ட நிதியில் வடக்கு மக்களுக்கு அளப்பெரும் சேவையாற்றவென தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் வைத்தியசாலையை பலநூறு மில்லியன் ரூபாய்கள் செலவில் கட்டித் தந்துள்ளனர்.

இந்நிலையில் நாளை மறுதினம் 6 ஆம் திகதி பருத்தித்துறையிலிருந்து தெற்குக்கு நடைபயணம் மேற்கொண்டு காலி மாவட்டத்திலுள்ள கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் களேஸ் ஒவ் கரீஜ் நிதியத்தினர் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை அமைக்கவுள்ளனர்.

எமது பிரதேசத்துக்கு புற்றுநோய் வைத்தியசாலை அமைத்துத் தந்தமைக்கு கைம்மாறு செய்யும் முகமாக நாம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து நடைபவனியை ஆரம்பித்து மக்களிடம் நிதி உதவிகளைப் பெற்று துரையப்பா விளையாட்டரங்கைச் சென்றடைந்து, பருத்தித்துறையிலிருந்து துரையப்பா விளையாட்டரங்கிற்கு வந்தடைந்த களேஸ் ஒவ் கரீஜ் நிதியத்தினரிடம் எம்மால் சேகரிக்கப்பட்ட பணம் ஒப்படைக்கப்படும்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர் நலன்புரிச் சங்க நிர்வாகம் தெரிவு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு புதிய நிர்வாகத்தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மீண்டும் செயலாளராக வயன் சி.ஹரிகரன் மூன்றாவது தடவையாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவி வழி தலைவராக வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகர் தெரிவு செய்யப்பட்டார்.

பொருளாளராக திருமதி யௌவனரூபி அகிலனும், உப தலைவராக வை.சுப்பிரமணியமும் உபசெயலாளராக பா.பாலேந்திரனும், கணக்காய்வாளராக மா.ஜெயக்குமாரும், சட்ட ஆலோசகராக சட்டத்தரணி சிவபாதமும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-7)

# ‘அமிர்தம்’ நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)


எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி கேட்போர் கூடத்தில், கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர், பழைய மாணவர் தாய்ச்சங்க அனுசரணையுடன் “அமிர்தம்” நூல் அறிமுக விழாவையும் இராப்போசனத்தையும் இணைத்து ஒன்று கூடலை நடத்தவுள்ளனர்.

“அமிர்தம்” என்னும் தலைப்பில் கல்லூரியின் கடந்த கால அதிபர்களின் விபரங்கள், ஆசிரியர்களின் புகைப்படங்கள், பழைய மாணவர் சங்க அங்கத்தவர் தகவல்கள் மற்றும் கல்லூரி மாணவர்களின் சாதனைகள் ஆகியவை 200 இற்கும் அதிகமான பக்கங்களில் பல வர்ணப்படங்களுடன் விபரிக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் உடுவை.எஸ். தில்லை நடராசாவின் தலைமையில் நடைபெறும் ஒன்றுகூடல் நிகழ்வில் விசேட விருந்தினர்களாக வட மாகாண சபை பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும் அரச அதிபருமாகிய. என்.வேதநாயகன், வட மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் ஆர்.இரவீந்திரன், வட மாகாண கடற்றொழில், போக்குவரத்து, வர்த்தக, கிராம அபிவிருத்தி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர் எஸ். சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார், கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி டி.எஸ்.சொலமன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ )

# மணிவிழா வாழ்த்து

யாழ்ப்பாண கோட்டக்கல்விப் பணிப்பாளராக
கடமையாற்றிய
குரு பிரதீபா பிரபா
**திரு. சுப்பையா சண்முககுமார்**
(SLPS, BA, Dip. in. Ed.MEd)



நல் ஆசானாய் நல் அதிபராய்
தலைசிறந்து கோட்டக்கல்விப்
பணிப்பாளராய் கல்விப்புலத்தின்
தளம்பாத நிறைகுடமாய் அனுபவத்
தினால் புடம்போட்ட தங்கமாய் இன்
முகத்துடன் எவரையுமே அரவணைத்து
சிறப்புடனே நிர்வகித்த
தன்னிகரில்லா தகைமையாளனாய்
மணி விழாக்கனும் நாயகனே
வாழி வாழி

(6104)

அதிபர் சங்கம்
யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

# நவராத்திரி பாமாலை

செல்வத்துக்கு இன்று முதலாம் நாள்




## அட்சய பூரணி அருள் தருவாள்

அட்சய பூரணியே–உன்
அருமையை என்னவென்பேன்
அகிலமே அசையுதென்றால்–உன்
அழகுச்செல்வத்தில் தான்
அலை நடுவிலே செல்வ நாயகியாய்
அடியார்க்கு அளப்பெரும் செல்வ
ரூபினியாய்
அதிக வளம் பரிந்திடம்மா!
அருள் செல்வம் சொரிந்திடம்மா!


பா.தர்சன்
நாவற்காடு, அச்சுவேலி.

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மணிவிழா வாழ்த்து



குருபிரதீபா பிரபா
திரு சுப்பையா சண்முககுமார்
SLPS,BA, Dip.In.Ed.MED



குரு பிரதீபா பிரபா
திரு சுப்பையா சண்முககுமார்
SLPS,BA, Dip.In.Ed.MED

இணுவையூர் சுப்பையா
தம்பதிகளின் நல் இணை
முத்துக்களாய் நானிலம் போற்ற
வாழ்ந்து கள்ளங்கபடமற்ற
உள்ளமும் இன்முகத்துடனும்
திகழ்ந்து நண்பர்களன்றி
பகைவர் யாருமிலோராய் நீவிர்
இருவீரும் மணி விழாக்காணும்
நிலைகண்டு மகிழும்.

(6105)

மு.முரளிதரன் அதிபர்,
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.

## கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாண சபை

**பொதுமக்கள் ஆலோசனைகள் : வடக்கு மாகாண இளையோர் கொள்கை**

வடக்கு மாகாண இளையோருக்கான முழுமையான கொள்கைத் திட்டமொன்றை உருவாக்குவதற்காக பொதுமக்களில் இது தொடர்பான கரிசனை கொண்டோர்களிடமிருந்து விதப்புரைகளை எதிர்பார்த்து, வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

கீழ்வரும் பிரதான துறைகளில் விதப்புரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1.கல்வி மற்றும் திறன் விருத்தி –வாழ்க்கை தொழிற்பயிற்சி உள்ளடங்கலாக
2.வேலைவாய்ப்பும் தொழில் முயற்சியாண்மையும்
3.சுகாதாரமும் நல்வாழ்வும் (இனப்பெருக்க சுகாதாரக் கல்வி உள்ளடங்கலாக)
4.சூழல் பாதுகாப்பு
5.சமாதானமும் நல்லிணக்கமும்
6.பொழுதுபோக்கு அம்சங்கள் –விளையாட்டுக்கள், கலைகள் மற்றும் விழுமியங்கள் சமய, பிரதேச கலாசார சிறப்பம்சங்கள் உள்ளடங்கலாக.

எமது அமைச்சினால் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் (UNFPA) அனுசரணையுடன் பல்துறை சார்ந்தோரின் பங்களிப்புடன் 19.09.2016 அன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் பெறப்பட்ட விதப்புரைகளின் வரைபு ஆவணத்தினை www.edumin.np.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

தங்கள் விதப்புரைகள் youthmoenp@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், கல்வி அமைச்சு – வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர் , யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ "இளையோர் கொள்கைக்கான பரிந்துரைகள்" எனப் பெயரிட்டுச் சமர்ப்பிக்க முடியும்.

தங்கள் விதப்புரைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதிநாள்: 21.10.2016 வெள்ளிக்கிழமை
மேலதிக தகவல்கள் மற்றும் விசாரணைகளுக்கு: E அஞ்சல் முகவரி youthmoenp @gmail.com

செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.

(அ-597)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 32, செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/Lகனடா Citizen<br>தொ.இ: B/6293 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 34.5<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/Lஅரசதொழில்<br>தொ.இ: G/2032 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 29<br>உயரம்: 178 cm<br>தகைமை/தொழில்:BSc(Hon) MSc civil Engineering USA (பொறியியலாளர்)<br>தொ.இ: B/6294 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 33.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L ஆசிரியை (அரச)<br>தொ.இ: G/2034 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 23.5, செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L உணவு விடுதி (மனேஜர்) Hotel (manager)<br>தொ.இ: B/6295 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 25, சூரி செவ் 9இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBBS<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்<br>தொ.இ: G/2035 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 3, சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L சொந்த தொழில்<br>தொ.இ: B/6296 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 29, சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் மருத்துவ விஞ்ஞானம் (UK NOT PR)<br>தொ.இ: G/2036 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )

# சண்முக மணிவிழாச்சபை சிறப்பிதழ்-04.10.2016



முழுப்பெயர்; திரு.சுப்பையா சண்முககுலகுமாரன்
ஆசிரியர் முதல் நியமனத் திகதி- 27.03.1979
அதிபர் நியமனம்-01.06.1991
ஆசிரியர் சேவை- 11 வருடங்கள்
அதிபர் சேவை- 22 வருடங்கள்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்- 4 வருடங்கள்
சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது- குரு பிரதீபா பிரபா-2011

| கல்வித்தகைமை | நிறுவனம் | கல்வி ஆண்டு |
|---|---|---|
| BA | பேராதனைப் பல்கலைக்கழகம் | 1990-1993 |
| M.Ed | யாழ்.பல்கலைக்கழகம் | 2001-2002 |
| Sc.Trd | பலாலி ஆசிரியர் கலாசாலை | 1983-1985 |
| Dip.in Edu | யாழ்.பல்கலைக்கழகம் | 1996-1997 |

**சேவை விபரம்**

நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை -ஆசிரியர் -27.03.1979-30.01.1983
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை -ஆசிரிய மாணவர்-31.01.1983-31.12.1985
புதுக்குடியிருப்பு ம.வி. -ஆசிரியர் -01.01.1985-30.06.1987
மயிலணி சைவத்தமிழ் வித்தியாலயம் -ஆசிரியர் -01.07.1987-05.10.1989
இணுவில் மத்திய கல்லூரி-ஆசிரியர், உப அதிபர்-06.10.1989-05.10.1997
சங்குவேலி அ.த.க.பாடசாலை-அதிபர் -06.10.1997-06.07.2005
தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை-அதிபர்-07.07.2005-30.07.2011
இணுவில் இந்துக் கல்லூரி-அதிபர் -01.08.2011-30.04.2012
தெல்லிப்பழை கல்விக் கோட்டம்-கோ.க.பணிப்பாளர்-01.05.2012-30.04.2015
உடுவில் கல்விக் கோட்டம் -கோ.க.பணிப்பாளர்-01.05.2015-03.10.2016

## இணுவில் கந்தசுவாமி கோவில் பிரதம குருக்கள் ந.உருத்திரமூர்த்தி குருக்களால் வழங்கப்பட்ட ஆசியுரை

தமிழ்மொழி ஆர்வம் மிக்க ஆய்வாளர்கள் கலைகளில் ஆர்வம் கொண்ட கலைஞர்கள்,கல்வி ஆர்வலர்கள் எனப்பலரும் செறிந்து வாழும் சிறப்புமிக்க திருவூரில் பிறந்தவர்கள் சுப்பையா சண்முககுமார், சண்முககுலகுமார். அவர்கள் அன்பும் அறமும் பொருந்தியவர்கள்.பண்புள்ளமும் அருமைக்கும் பெருமைக்கும் ஒப்பில்லாதவர்கள்.

கல்விப்பண்பாடு விழுமியங்களை பேணுவதோடு அல்லாமல் அறிவுச்சுடரை அலங்கரிக்கும் சாதனையாளர் பலரை உருவாக்கிய ஆசான்களாக மட்டும் அல்லாமல் ஆசான்கள் பலரை வழிநடத்தும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களாகச் சேவையாற்றியவர்கள். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியோடு சேவையாற்றும் யாவர்க்கும் நல்ல எதிர்காலம் உண்டு என்பதற்கு உதாரண கர்த்தா இவர்கள்.

## வாழ்த்துச் செய்தி

அன்புக்கும் உயர் மதிப்பிற்குமுரிய எங்கள் கோட்டக்கல்வி அதிகாரி திரு.சுப்பையா சண்முககுலகுமாரன் அவர்களின் சேவை நலன்பாராட்டு விழாவில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எமது கோட்டக்கல்வி அதிகாரி உடுவில் கோட்டப் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்காக சிறப்பான சேவையாற்றியவர்.

மேலும் இவர் எமது கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவன் மட்டுமன்றி சிறந்த ஆசிரியராகவும் திகழ்ந்து அதிபர் தரத்திலே சித்தியடைந்து ஆரம்பப் பிரிவின் பகுதித்தலைவராக சிறப்பான பணியாற்றியவர்.

அதிபர்,
யாழ். இணுவில் மத்திய கல்லூரி.

## கல்வி உலகின் அபூர்வ சகோதரர்கள்

கல்விப்புலத்தை அலங்கரித்து வந்த இரட்டையர்களான திரு.சுப்பையா சண்முககுமார்,திரு.சுப்பையா சண்முககுலகுமாரன் ஆகிய இருவரினதும் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இணுவில் கிராமத்தின் பெருமைக்குரிய விவசாயக் குடும்பத்தில் இரட்டையர்களாக அவதரித்த இருவரும் இனம்காண முடியாதவாறு ஒரே உருவத்தைக் கொண்டிருந்ததுடன் பழக்க வழக்கங்களையும் ஒரே மாதிரியாகவே கொண்டிருந்தனர். இறை பக்தியிலும் பெரியோர்களை மதிப்பதிலும் உயர்ந்து நின்ற இவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாகக் காணப்பட்டனர்.

இதன் காரணமாகவே ஒன்றாகவே ஆசிரியத் தொழிலில் இணைந்து, ஒரே கல்வித் தரத்தை கொண்டவர்களாகவும் ஒரே பதவியை வகிப்பவர்களாகவும் விளங்கினர். இதன்விளைவாகவே ஆசிரியர்,அதிபர்,கல்விப்பணிப்பாளர் எனப் படிப்படியாக பதவிநிலைகளில் உயர்வடைந்து இன்று யாழ்ப்பாண வலயத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராக திரு.சண்முககுமார் அவர்களும் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக திரு.சண்முககுலகுமாரன் அவர்களும் பணியாற்றி ஓய்வு பெறுகின்றனர்.இவர்கள் ஓய்வுக் காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பேராசிரியர் க.தேவராஜா,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச்செய்தி

வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கோட்டத்தின் கோட்டக் கல்வி அலுவலர் திரு.சுப்பையா சண்முககுலகுமாரன் அவர்களின் மணிவிழாவுக்கான எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருக்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டும் மகிழ்வடைகின்றேன்.

ஆசிரியராகக் கல்விப் புலத்திலே கால்பதித்த திரு.சுப்பையா சண்முககுலகுமாரன் அவர்கள் தனது கல்விச் சேவையிலே ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக, கோட்டக்கல்வி அலுவலராக எனப் பல பதவிகளை வகித்து அனுபவம் மிக்க ஒருவராக இன்று ஓய்வு பெறுகின்றார்.

பல்வேறு நல்ல பண்புகளைத் தன்னகத்தே கொண்ட இவர், கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி, விளையாட்டுத்துறை, கலைத்துறை, பண்பாடு, சமய நிகழ்வுகள் எல்லாவற்றிலுமே மாணவர்களை ஈடுபட வைத்து வெற்றிகண்டவர்.

செல்வரட்ணம் சந்திரராஜா,
SLEAS: 1 கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.

## இணுவிலூரின் ஒளிவிளக்குகள்

சகல கலைகளிலும் சிறப்புற்று விளங்கும் எமது இணுவிலூரிலே சிறந்த விவசாயக் குடும்பம் ஒன்றில் உதித்தவர்களே திரு. சு.சண்முககுலகுமாரும் திரு.சு.சண்முககுமாரும் ஆவர். இளமையிலிருந்தே எல்லோரிடமும் அன்பாகப் பேசிப்பழகுவதை இயல்பாகக் கொண்டிருந்த இவர்கள் கல்வி கற்பதில் சிறந்து விளங்கினர். நல்லாசிரியர்களாக, அதிபர்களாக வளர்ந்து கோட்டக்கல்விப் பணிப்பாளர்களாக உயர்வு பெற்றார்கள். தாம் கற்பிக்கின்ற பாடசாலைகளை வளர்ச்சியடையச் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

இதுமட்டுமன்றி தாம் கல்வி கற்ற பாடசாலைகள் , தமது ஊர் ஆகியவை முன்னேற்றம் அடையவேண்டுமென்ற ஆவல் காரணமாக தமது சேவையைச் செய்வனே செய்தார்கள். இணுவில் திருவூர் சிறந்து விளங்குவதற்கு ஒளிவிளக்காக இருந்த இவர்கள் இணுவில் அன்னையின் மகுடத்தில் பதித்த இரத்தினங்கள் ஆவர்.இவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புள்ளதாகவும் எமதூர் மக்களுக்குப் பயனுள்ளதாகவும் அமையவேண்டும். இதற்காக இவர்களுக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வாழ்வுக்குத் தேவையான சகல செல்வங்களையும் அருள வேண்டுமென்று எல்லாம்வல்ல நொச்சியொல்லை வேற்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.


வை.ஸ்ரீஸ்கந்தவரோதயர்
தலைவர், கணேசர் கருணைநிதியம், உப தலைவர்,
இணுவில் இந்துக் கல்லூரி, அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்.

## ஆசியுரை

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் இணுவிலைச் சேர்ந்த திரு சுப்பையா தம்பதியினருக்கு எல்லோராலும் போற்றி வணங்கப்படும் இணுவில் கந்தசுவாமி கோயில் சண்முகநாதப் பெருமானின் திருவருளால் இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். எம்பெருமானாகிய சண்முகப் பெருமான் மீது அளவற்ற பக்தியும் விருப்பமும் கொண்ட திரு.சுப்பையா அவர்கள் சண்முககுமாரன், சண்முககுலகுமாரன் என்ற பெயர்களை அவர்களுக்குச்சூட்டி அன்பாக அழைத்து வந்தார்.

இவர்கள் வாழ்வு மென்மேலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இணுவில் சண்முகநாதப் பெருமான் அருள்புரிவாராக.

வை.சோமாஸ்கந்தகுருக்கள்
ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில்.



முழுப்பெயர்- சுப்பையா சண்முககுமார்
ஆசிரியர் முதல் நியமனத்திகதி:- 23.07.1979
ஆசிரிய சேவை 11 வருடங்கள்
அதிபர் சேவை 22 வருடங்கள் (1-6-91 முதல்)
கோட்டக்கல்விப் பணிப்பாளர் 04 வருடங்கள் (6-7-12 முதல்)
சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது *வித்தியாவிஜயஸ்ரீ 2005 குருபிரதீபாபிரபா-2011*

| கல்வித்தகைமை | நிறுவனம் | கல்வி ஆண்டு |
|---|---|---|
| B.A | பேராதனைப் பல்கலைக்கழகம் | 1989-1991 |
| M.Ed | யாழ். பல்கலைக்கழகம் | 2000-2001 |
| Sc.Trd | பலாலி ஆசிரிய கலாசாலை | 83/84/85 |
| Dip.in Ed | யாழ். பல்கலைக்கழகம் | 1996-1997 |

**சேவை விபரம்**

திரு/பட்டித்திடல் அ.த.க.வித்தி.-ஆசிரியர்-23.07.79-30.01.83
பலாலி ஆசிரிய கலாசாலை- ஆசிரியமாணவர்-31.01.83-31.12.85
முல்/விஸ்வமடு அ.த.க.வித்தி.- ஆசிரியர்-01.01.85 -30.06.87
யா/கந்தரோடை ஸ்கந்தையா வித்தி-ஆசிரியர்-01.07.87-17.09.89
யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-ஆசிரியர்-18.09.89-19.01.91
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.-ஆசிரியர்-20.01.91-18.02.92
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி-ஆசிரியர்-19.02.92-09.06.93
யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி.-உப அதிபர்-10.06.93-18.06.96
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.-அதிபர்-19.07.96-09.01.2006
யா/ கோண்டாவில் இந்து மகா வித்தி.-அதிபர்-10.01.06-05.07.2012
யாழ்ப்பாணக்கோ.க.பணிப்பாளர்-கோ.க.பணிப்பாளர்-06.07.2012-03.10.2016

## வாழ்த்துச் செய்தி

திரு.சுப்பையா சண்முககுலகுமாரன் (உடுவில் கோட்டம்)
திரு.சுப்பையா சண்முககுமார் (யாழ்ப்பாணக் கோட்டம்)

இருவரும் ஆரம்பக் கல்வியை யா/ இணுவில் மத்திய கல்லூரியில் (சைவ மகாஜன வித்தியாலயம்) கல்வி கற்று இடைநிலைக் கல்வியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிறைவு செய்து ஆசிரிய சேவையில் விஞ்ஞான ஆசிரியர்களாக பிரவேசித்து கல்வியில் உயர்ந்த பதவிகளைப் பெற்று கோட்டக் கல்வி அதிகாரியாக சேவை புரிந்து இன்றுடன் இளைப்பாறும் நண்பர்கள் இருவரையும் வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலம் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.ம.உதயகுமாரன்,
பிரதி அதிபர்,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

எந்தவொரு சவால்களையும் துணிவுடன் எதிர்கொள்ளும்
சேவையாளர்களை மணிவிழா கண்டு சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றேன்.
S.ஜெகபாலன்(தலைவர் மக்கள் நலன் பேணும் அமைப்பு) கோண்டாவில்
தன்னம்பிக்கையும் தளரா முயற்சியும் கொண்டு
உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோராது திடமாகக் கடமையாற்றுபவர்கள்
திரு. V.தயாபாலன்
(சிரேஷ்ட ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி)
எடுத்த காரியத்தை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்கும்
ஆற்றல் கொண்ட மணிவிழா நாயகர்களுக்கு
எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன்
யாழ்.பல்கலைக்கழகம்
தெளிந்த சிந்தனையுடனும் உள்ளத்தூய்மையுடனும்
பணியாற்றுகின்ற மணிவிழா நாயகர்களுக்கு
எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்
S.K. எழில்வேந்தன்
(அதிபர்.யாழ்.மத்திய கல்லூரி)
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்
ஆசிரியர்களுக்கோர் கலங்கரை விளக்காய்
நிர்வாகத்தினருக்கோர் முன்மாதிரியாய்
இன்று போல் என்றும் வாழ்க
சரா புவனேஸ்வரன்(செயலாளர் இ.த.ஆ.சங்கம்)
எந்தக்காரியத்தையும் பயமின்றி உறுதியுடன் உளவன்மையுடனும்
செய்து முடிக்கும் எமது பொன்விழா நாயகன் தயாபாலன்
அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றேன்
சண் வாமதேவன்(ஓய்வுநிலை அதிபர்)
இரக்கத்தின் உறைவிடமே இன்பத்தின் ஊற்றே
அகவை அறுபதில் தடம்பதிக்கும் இன்பம்போல்
பல்லாண்டு காலம் நீடூழி வாழ என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்
ஆ.மோகனாதன் (அதிபர் கோண்டாவில் இந்துக்கல்லூரி)
S.பரமேஸ்வரன்(அதிபர் யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்)
உயர்விற்கு வழிகாட்டும் உத்தமர்களே
எங்கள் உயிரினில் கலந்திட்ட ஒளி விளக்குகளே
நிறைந்த நல் மணி விழா நாள் தனில்
நின் பணி போற்றுகின்றேன்.
யோகேஸ்வரலிங்கம்,
தாயஹரான்,ராகவன்,அருள்குமரன்,அருட்குமரன்,நேரு,ஸ்ரீ ரஞ்சன்
(ஆசிரியர்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**சண்முக மணிவிழாச்சபை, இணுவில்**






# விக்னேஸ்வரனுக்கு எதிரான கருத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கண்டிக்கிறது



முதலமைச்சருக்கு எதிரான கருத்துக்கள் தனிப்பட்டவருக்கு மட்டுமானதன்று. அவை ஒட்டு மொத்த தமிழ்த் தேசிய இனத்திற்கும் எதிராகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

"எழுக தமிழ்" எழுச்சிப் பேரணியினால் தென்னிலங்கை அரசியல் சமூகம் கலக்கமடைந்திருப்பதாகவும், அதனாலேயே ஆட்சியாளர்களும், சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகளும் இனவாதக் கருத்துக்களைப் பரப்பி வருவதாகவும் இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்,ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள ஊடக செய்தியில் தெரிவித்திருப்பதாவது,

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட இருப்பதாக தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடனான மைத்திரி, ரணில் ஆகியோர் தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்ட வேளையில் தெரிவிக்கப்பட்டது. மைத்திரி-ரணில் கூட்டணி அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சி அந்தஸ்தும் கிட்டியது.




ஆனால், தமிழ் மக்களின் நீண்டகாலப்பிரச்சினையான அரசியல் தீர்வு ஒருபுறம் இருக்க, நாளாந்தப் பிரச்சினைகளான அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் ஆக்கப்பட்டோரின் உண்மை நிலை, இராணுவத்தினரின் வசமுள்ள காணிகளை உரிமையாளர்களிடம் கையளித்தல், தமிழ்ப் பிரதேசங்களில் அத்துமீறிய புத்த விகாரைகளைக் கட்டுவதை நிறுத்துதல், வழிபட யாருமற்ற இடங்களில் புத்தர்சிலைகளை வைப்பதைத் தவிர்த்தல், அரச அனுசரணையுடன் வலிந்து மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள குடியேற்றங்களைக் கைவிடுதல் போன்றவற்றைக்கூட இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பது இந்த அரசாங்கமும் கடந்த அரசாங்கங்களைப் போன்றே செயற்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இந்நிலையில் அரசியல் தீர்வு என்பது எவ்வாறு அமையப்போகிறது என்ற பலத்த சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மேற்கண்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி இலங்கை அரசினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக தமிழ் மக்கள் பேரவை விடுத்த வேண்டுகோளை ஏற்று வடக்கு மாகாண முதலமைச்சரின் அறைகூவலுக்கிணங்கவும் பேரவையில் அங்கம் வகிக்கும் பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் அழைப்பிற்கிணங்கவும், தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்காக தமிழ் மக்கள் பெருமளவில் "எழுக தமிழ்" பேரணியில் கலந்துகொண்டனர். அதில் பங்குபற்றிய எவரும் எந்தவொரு இனத்திற்கும் எதிராக முழக்கமிடவோ, கருத்துரைக்கவோ இல்லை. தமது உரிமைகளை வலியுறுத்தியும், தமது தேவைகளை முன் வைத்தும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிவேண்டியுமே மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் முழக்கமிட்டிருந்தனர், கருத்துரைத்திருந்தனர்.

"எழுக தமிழ்" பேரணி சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளுக்கும், சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பி அதில் குளிர்காய நினைக்கும் அரசியல் சக்திகளுக்கும், பௌத்தமத அடிப்படைவாதிகளுக்கும் தமிழ் மக்களின் உரிமைக்குரல் எப்போதுமே இனவாதமாகத் தெரிவது ஒன்றும் ஆச்சரியமல்ல.

எந்தவொரு இனத்தையோ, மதத்தையோ, சமூகத்தையோ தாக்காமல் தமது உரிமைகளை மட்டுமே வலியுறுத்தி முழக்கமிட்டு அந்த முழக்கங்கள் சார்ந்த உரைகள் இடம்பெற்ற ஒரு பேரணிக்குத் தலைமை தாங்கிய வடக்கு மாகாண முதலமைச்சரைத் தனிப்பட்ட ரீதியில் விமர்சிப்பது எந்தவகையில் நியாயமாகும்?

பொதுபலசேனாவின் செயலாளர் தலைமையில் வவுனியாவில் திட்டமிட்டு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை அணிதிரட்டி நடைபெற்ற ஒரு பேரணியில் தமது தரப்பு நியாயத்தை முன்வைக்க முடியாமல், வெறும் இனவாதக் கருத்துக்களை மட்டும் முன்வைத்தும் வடக்கு மாகாண முதலமைச்சரைத் தனிப்பட்டரீதியில் விமர்சித்தும் ஏட்டிக்குப் போட்டியாக ஒரு பேரணி நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பேரணி ஒரு விடயத்தைத் தெளிவாக தமிழ் மக்களுக்கும், இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றது.

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் வந்தேறு குடிகள் என்றும் அவர்கள் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகளின் காலடியிலேயே வாழ வேண்டும் என்றும், தாங்கள் நினைத்தபடி எதையும் செய்யும் அதிகாரம் படைத்தவர்கள் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறது. இது குறித்து இன்று வரை ஆட்சியாளர்களிடமிருந்தோ, தென்னிலங்கை அரசியல் சமூகத்திடமிருந்தோ எதுவிதக் கருத்துக்களும் வெளிப்படாமை எமக்குப் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

முதலமைச்சருக்கு எதிராகத் தெரிவிக்கும் கருத்துக்கள் என்பது ஒரு தனிப்பட்ட மனிதருக்கு எதிராகத் தெரிவிக்கும் கருத்துக்கள் அல்ல என்பதையும், அது ஒட்டு மொத்த தமிழ் சமூகத்திற்கும் எதிராகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் என்பதையும் இந்த நாட்டு மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் இன்று மௌனம் காத்தால் என்றுமே பேச முடியாதவர்களாகவே இருப்போம்.

எமது உரிமைகளை வலியுறுத்தி மக்களை அணிதிரட்டியது இனவாதம் என்றால் இன்னொரு இனத்திற்கு எதிராக நடத்தப்பட்ட பேரணியை என்னவென்று அழைப்பது? இந்த நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தையும், நல்லாட்சியையும் அமுல்படுத்த நினைப்பவர்கள் முதலில் சிங்கள பௌத்த இனவாத அடிப்படைவாதிகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும். மேலும், தமிழ் மக்களுக்கு உரித்துடைய உரிமைகளை வழங்கி, அவர்களுக்கு இதுவரை காலமும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிவழங்குவதனூடாகவே அது சாத்தியமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

## விபத்தில் இருவர் படுகாயம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு காட்டு அந்தோனியார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மல்லிகைத்தீவு காட்டு அந்தோனியார் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் அதிக வேகம் காரணமாக வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களை வீதியில் வந்தவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்த்தனர். இவர்கள் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தை சேர்ந்த ஆ.யடிலன், புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த அ.நிலக்சன் ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## மல்லாவியில் வாகனங்களுக்கான புகை பரிசோதனை நிலையம் அமைக்குக

### துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச மக்கள் கோரிக்கை



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய்,மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு பொதுவான வகையில் மல்லாவியில் வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை நிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென மேற்படி பிரதேச மக்கள் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரிடம்கோரிக்கைவிடுத்துள்ளனர்.


இது தொடர்பில் தெரியவருவதாவது,

துணுக்காய்,மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளில் சுமார் மூன்றாயிரம் வரையிலான வாகனங்கள் புகைப்பரிசோதனை சான்றிதழ்கள் பெறுவதற்காக 25 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள ஏ-9 வீதி மாங்குளத்தில் உள்ள புகைப் பரிசோதனை நிலையத்திற்கு வாகனங்களை கொண்டு சென்று புகைப் பரிசோதனைக்குட்படுத்தி சான்றிதழ்கள் பெறவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

மேற்படி இரண்டு பிரதேச செயலக பிரிவுகளிலும் மோட்டார் சைக்கிள் 2 ஆயிரத்து 445, ஆட்டோக்கள் 188,பாரவூர்தி வகை வாகனங்கள் 59,இலகுரக வாகனங்கள் 110,ஏனைய வாகனங்கள் 160 என மொத்தம் 3ஆயிரத்திற்கு மேற்பட்ட வாகனங்கள் புகைப்பரி சோதனைக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளதால் மல்லாவியில் புகைப் பரிசோதனை நிலையம் ஒன்று அமைவது பொருத்தமானதாகும்.

எனவே பெரும் பண விரயத்தின் மத்தியில் மாங்குளத்திற்கு செல்வதைத் தவிர்க்கும் முகமாக மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட வாகன உரிமையாளர்களின் நலன்கருதி வாரத்தில் ஒருநாள் ஆகினும் மல்லாவியில் புகைப்பரிசோதனை செய்வதற்குரிய வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் மேற்படி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

## வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப். காரியாலயம் திறந்து வைப்பு






(குருமன்காடு)

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இல. 163, 6 ஆம் ஒழுங்கை, கண்டிவீதி, தேக்கவத்தை,வவுனியா என்ற முகவரியில் திறந்து வைக்கப்பட்டுள்ள இக் காரியாலயம் கட்சியின் தலைவரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.

அக்கட்சியின் அரசியல்பீட உறுப்பினர் கே.கே. அருந்தவராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரட்ணம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான க.சர்வேஸ்வரன்,ஆர்.இந்திரராசா, எம்.தியாகராசா, து.ரவிகரன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.பி. நடராஜ் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## குளவிசுட்டானில் பகல்வேளையில் அடிக்கடி வீதிக்கு வரும் யானை

வவுனியா, குளவிசுட்டான் பகுதியில் பகல் வேளையில் யானை ஒன்று அடிக்கடி வீதிக்கு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குளவிசுட்டான் காட்டுப்பகுதியூடாக அப்பகுதி வீதியை ஊடறுத்து இந்த யானை அடிக்கடி கடந்து செல்வதுடன் மக்கள் குடியிருப்புக்களுக்கும் வந்து செல்கின்றது. இதனால் இப்பகுதியூடாக போக்குவரத்து செய்யும் மக்களும் இப்பகுதியில் குடியிருக்கும் மக்களும் அச்சத்துடனேயே வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



இப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யானை ஒன்று மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்தமை குறிப்பிடத்தக்கது.(2-250)

# வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றி தமிழர்களின் விகிதாசாரத்தை குறைத்தல்

## அரசின் நோக்கம் இதுவாகும் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(வவுனியா)

வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றி, தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் வவுனியா அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு, கிழக்கில் பௌத்த மேலாதிக்கத்தை கொண்டு வருவதற்கே அரசு முயற்சிக்கின்றது. கொக்கிளாயில் தனியார் காணியில் பௌத்த விஹாரை அமைக்கப்படுகின்றது. சிங்கள குடியேற்றங்கள் ஊடாக, வடக்கில் 30 வீதம் சிங்கள மக்களை குடியேற்றி தமிழர்களின் விகிதாசாரத்தை குறைப்பதே அரசின் முக்கிய நோக்கமாகும். இதற்காகவே சிங்கள அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் இரண்டு இலட்சம் இராணுவத்தினர் உள்ளனர். இவர்களில் ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் வடக்கில் உள்ளனர். இவர்கள் இங்கு பௌத்த விஹாரைகளை அமைத்து வருகின்றனர். இந் நிலையில் சமஷ்டி அரசியல் அமைப்பு முறை வந்தாலேயே தமிழர்களின் பிரச்சினை தீரும். அத்துடன் வடக்கு, கிழக்கில் மக்கள் ஒன்றிணைந்து அபிவிருத்தியும் அடைவார்கள்.

இதனைக் கூறும்போது ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர்களும், சுதந்திர கட்சியினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும், தீவிரவாத போக்குடைய சிங்களவர்களும் வடக்கு மக்கள் இனவாதமாக செயற்படுவதாக கூறுகின்றனர். சமஷ்டியை கோருவதால் எங்கு இனவாதம் உள்ளது என்பது



தெரியவில்லை.

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வென்று அரசு கூறுகின்றது. இந் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச வேண்டும். அப் பேச்சுவார்த்தை மூன்றாம் தர மத்தியஸ்தத்துடன் நடைபெறவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியது. ஆனால் அதுவும் நடைபெறவில்லை என்றார். (2-4)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் நடப்பாண்டிற்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு வகையான மருத்துவ முகாம்கள், மரநடுகை, வீதி விளக்குகள் பொருத்துதல், விளையாட்டுப் போட்டிகள், சிரமதானப் பணிகள் மேற்கொள்ளல் எனப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உள்ளூராட்சி வாரத்தின் ஆரம்ப நிகழ்வாக சுகாதாரமும் ஆரோக்கியமும் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலவச சித்த ஆயுள்வேத சிகிச்சை முகாம் இலைக்கஞ்சி வழங்கும் நடமாடும் சேவையும் வள்ளிபுனம் இனியவாழ்வு இல்ல ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆயுள்வேத மருந்துக் கலவையாளர் த.சுதாகரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் ந.ஜெயராஜா கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நடமாடும் சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்நடமாடும் முகாமில் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு திருமுறிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

இந் நடமாடும் சேவையைத் தொடர்ந்து எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான காலப்பகுதியினுள் பல்வேறு வகையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




சிறுவர் நிதியத்தின் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத்திட்டத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு எழுகை சுய உதவிக்குழு சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்த சிறுவர்கள் கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் சிறப்புற இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் சிறுவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஆசனங்கள் ஒதுக்குவதற்கு முடிவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஆசனங்கள் ஒதுக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் உள்ள போதிலும், பேருந்துகளில் பயணம் செய்யும்போது, அவர்களுக்கான ஆசனங்கள் ஒதுக்கப்படாததன் காரணமாக, போக்குவரத்து செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக மாற்றுத்திறனாளிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே, மாற்றுத்திறனாளிகளுக்கு பேருந்துகளில் சிறப்பு ஆசனங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2)

## சமூக சேவைகள் அலுவலகம் திறப்பு

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்ட மன்னார் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், வவுனியா - மன்னார் வீதியிலுள்ள உயிலங்குளத்தில், கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

10 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கட்டடத்தை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், கேட்போர் கூடம், தனியான அலுவலகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில், இந்த கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள மாகாண பணிப்பாளர் திருமதி.நளாயினி இன்பராஜ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. (2)

## முன்னாள் போராளிகள் 146 பேருக்கு விஷ ஊசி மருத்துவப் பரிசோதனை


(குருமன்காடு)

விஷ ஊசி விவகாரம் தொடர்பில் ஐந்தாவது வாரமாகவும் இடம்பெற்ற முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ பரிசோதனையில் இதுவரை 146 பேர் மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விஷ ஊசி தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் முதலாம் வாரம் கடந்த 2ஆம் திகதியும், இரண்டாம் வாரம் 9 ஆம் திகதியும், மூன்றாம் வாரம் 15ஆம், 16 ஆம் திகதியும், நான்காம் வாரம் 23 ஆம் திகதியும், ஐந்தாம் வாரம் 30 ஆம் திகதியும் புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ பரிசோதனைகள் வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் இடம்பெற்றன.

அதில் யாழ். மாவட்டத்தில் 29 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 24 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 81 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும், மன்னார் மாவட்டத்தில் 5 பேருமாக மொத்தம் 146 பேர் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் 2 ஆம் திகதி 26 பேரும், 9 ஆம் திகதி 47 பேரும், 15 ஆம் 16 ஆம் திகதிகளில் 22 பேரும், 23




ஆம் திகதி 30 பேரும், 30 ஆம் திகதி 21 பேரும் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்றிருந்தனர். இதேவேளை, எதிர்காலத்தில் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மேற்படி மருத்துவ பரிசோதனைகள் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (2-250)

## 45 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் 400 விவசாயிகளுக்கு விதை உள்ளீடுகள்

(மல்லாவி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் 45 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 400 விவசாயிகளுக்கு விதை உள்ளீடுகள், வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரமந்தனாறு பொதுநோக்கு மண்டபத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது விவசாயிகளுக்கு விதை உள்ளீடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக பயிற்சி செய்கையில் ஈடுபடுகின்ற 400 விவசாயிகளில் நெற்செய்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு மூன்று புசல் நெல். மேட்டுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்பவர்களுக்கு அரை ஏக்கருக்கு 20 கிலோ கிராம் கச்சான், 1/4 ஏக்கருக்கு 5 கிலோ கிராம் பயறு, 1/4 ஏக்கருக்கு 5 கிலோ கிராம் உழுந்து என மொத்தம் ஒரு ஏக்கருக்குக்குரிய உப உணவு பயிர்களின் விதை உள்ளீடுகளுக்காக மொத்தம் 25 இலட்சம் விதை உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.


தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 400 விவசாயிகளுக்கு தரை பண்படுத்தலுக்கு மொத்தம் 20 இலட்சம் ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உபதிவிடப் பிரதிநிதி, கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை திணைக்களத்தின் பிரதி ஆணையாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்ட முகாமையாளர் மற்றும் கமத்தொழில் அமைப்பினர், கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவை களமிறக்க முனையும் மகிந்த அணி!


(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சுமேதா பெரேரா கடந்த மாதம் 30 ஆம் திகதி இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில் அவரை உள்ளூராட்சித் தேர்தலில் களமிறக்க மகிந்த அணியினர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுறது. ஓய்வுக்குப் பின்னர், மேஜர் ஜெனரல் சுமேதா பெரேரா நியூயோர்க்கிலுள்ள ஐ.நாவின் இலங்கை வதிவிட பிரதிநிதியின் பணியத்திற்கான புதிய இராணுவ இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.



இந்நிலையில், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவ சிப்பாய்களை இணைத்துக் கொண்டு தேர்தலில் களமிறங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வரும் மகிந்த ஆதரவு பொது எதிரணியானது அவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது. எனினும் அவரிடமிருந்து இன்னும் உரிய பதில் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் நெருங்கிய உறவை பேணிவந்த சுமேதா பெரேரா, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவ சதிப்புரட்சியொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டதாக தெரிவிக்கப்பட்ட விடயத்துடனும் தொடர்புபடுத்தி பேசப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மோப்ப நாய்களால் அகப்பட்ட திருடர்கள்



வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டவளை ரொசல்ல பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் திருடப்பட்ட 9 பவுண் தங்க நகைகள் மற்றும் ஒரு இலட்சம் ரூபாரொக்க பணம் ஆகியவற்றை திருடிச் சென்றவர்கள் புதிதாக அட்டன் பிரதேச பொலிஸ் பிரிவுக்கு அண்மையில் கொண்டு வரப்பட்ட மோப்ப நாய்களின் உதவியோடு பிடிக்கப்பட்டதாக மோப்ப நாய் பிரிவின் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு நடந்த இந்த சம்பவத்தில் ஆசிரியர் மற்றும் அவரின் மனைவி வீட்டை விட்டு வெளியில் சென்ற வேளையில் வீட்டில் உட்புகுந்த இனந்தெரியாதவர்கள் மின்சாரத்தை நிறுத்திவிட்டு தந்திரமாக கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டில் முதியோர் ஒருவர் மட்டும் இருந்ததாக தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் காலை முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை ஏற்ற பொலிஸார் மோப்ப நாய்களை ஸ்தலத்திற்கு கொண்டு விசாரணை நடவடிக்கையில் ஈடுபட்ட போது அந்த மோப்ப நாய்கள் திருடர்களால் விட்டு செல்லப்பட்ட கைத்தொலைபேசியின் பின்புற மூடியை மோப்பம் எடுத்து பின் தொடர்ந்த மோப்ப நாய்கள் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த கைத்தொலைபேசிக்கு சம்பந்தப்பட்ட நபர்களை தாவி பிடித்துள்ளது.

இதன் பின்னர் பொலிஸார் இவர்களின் மீது மேற்கொண்ட விசாரணையின் பொழுது உண்மையான திருட்டு சம்பவம் அம்பலமானது. அதன்பின் குறித்த இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் குறித்த நபர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகள் மீட்கப்படாத நிலையில் 70 ஆயிரம் ரூபாய் பணமும் ஒரு கைத்தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பு

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் வரட்சி, மழை வெள்ளம் உள்ளிட்ட பல்வேறு இயற்கை அனர்த்தங்களினால் இவ்வாறு பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் எய்தப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி குறித்து திருப்தி கொள்ள முடியாது. மழை வெள்ளம் மற்றும் வரட்சி காரணமாக விவசாயம், கைத்தொழில் நடவடிக்கைகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 5 வீதம் அல்லது அதனை விடவும் சற்றே கூடிய பெறுமதியை பதிவு செய்யும் என அவர் எதிர்வுகூறியுள்ளார். (இ-7)

# வளமோடு வாழலாம்




நீரிழிவு ஏற்பட்டவர்கள் எந்தெந்த உணவுகளைச் சாப்பிடலாம். எந்த உணவுகளைச் சாப்பிடக்கூடாது என பார்க்கலாம்.

### சாப்பிடக் கூடாத உணவுகள்

காய்கறிகளில் பீட்ரூட், திராட்சை, சீனி, ஜாம், கிறீம் பிஸ்கட், சொக்கலேட், கார்பனேற்றப்பட்ட குளிர்பானங்கள், ஐஸ்கிறீம், கேக், முந்திரி, கிறீம் வகை உணவுகள், கொழுப்பு நிறைந்த மசாலா உணவுகள், ப்ரிஸ்ர் வெட்டிவ் கலந்த உணவுகள் ஆகியவைகள் கெடுதல் தரும். உடற்பயிற்சி இல்லாதது, நல்ல ஆரோக்கியமான உணவுப்பழக்கம் இல்லாதது, நிறைய மசாலா உணவுகள் மற்றும் குளிர்பானங்கள், உடல்பருமன் ஆகியவைகள்தான் நீரிழிவு நோய் உருவாகக் காரணங்கள். அத்தோடு குளுக்கோஸ் அளவை கட்டுப்படுத்தும் இன்சுலின் ஓமோன் உற்பத்தியில் திடீர் மாற்றம் எற்பட்டு, அது சுரக்காமல் போகும்போது குளுக்கோசின் அளவு இரத்தத்தில் அதிகரிக்கிறது. விளைவு நீரிழிவு வியாதி.

### சாப்பிடக் கூடிய உணவுகள்

### தேநீர்

சீனி இல்லாத தேநீர், மூலிகை தேநீர், சீமை சாமந்தி தேநீர், ஆகியவை நல்லது. நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைத்திருக்கும். சீனிக்குப் பதிலாக தேன், பேரிச்சம் பழம் ஆகியவற்றை பயன்படுத்தலாம். கொழுப்பு நீக்கப்பட்ட பால், வெண்ணெய் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

முழுத்தானியங்கள் : கோதுமை, ராகி நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறந்த உணவாகும். பழங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டால், இரத்தத்தில் சீனியின் அளவு உயராமல் எப்போதும் கட்டுக்குள் இருக்கும்.

காய்கறிகள்: வெள்ளரிக்காய், முள்ளங்கி, தக்காளி, கரட், பூண்டு, வெங்காயம், பீன்ஸ், முட்டைக்கோஸ் தினமும் தவறாமல் கீரை வகைகள் ஆகியவற்றை சாப்பிட வேண்டும். நிறைய கலர்கலரான காய்களை சாப்பிடும்போது, உங்கள் கணையம் நன்றாக செயல் புரியும். இன்சுலின் சுரப்பைத்தூண்டும்.

### நார்ச்சத்து உணவுகள்


நார்ச்சத்து கொண்ட உணவு வகைகளை சிறந்த முறையில் குளுக்கோஸை இரத்தத்தில் கட்டுப்படுத்தும். அதிக நார்ச்சத்து உணவுகளை சாப்பிட்டால் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு எப்போதும் குளுக்கோஸின் அளவு கட்டுக்குள் இருக்கும் என ஆய்வுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஏனெனில் இவற்றில் அதிக அளவு குரோமியம் உள்ளது. இவை இரத்தத்தில் குளுக்கோஸின் அளவை குறைக்கச் செய்யும்.

### பொட்டாசியம் நிறைந்த உணவுகள்

பொட்டாசியம் அதிகம் நிறைந்த நட்ஸ், வாழைப்பழம், கிவி, அப்பிள் சைடர் வினிகர், பட்டாணி அகியவற்றை சாப்பிடுங்கள். அதுபோல் பார்லி அரிசி, ஓட்ஸ், பாதாம், எல்லாவித பீன்ஸ் வகைகள் ஆகியவை நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு நல்லது செய்யும். வாழைப்பழத்தில் காபோவைதரேட் உள்ளதால் நீரிழிவு நோய் உள்ளவர்கள் வாழைப் பழம் சாப்பிடக் கூடாது என சொல்வார்கள். ஆனால் வாழைப்பழத்தில் அதிக அளவு பொட்டாசியம், நார்ச்சத்து ஆகியவை உள்ளன. இவை இரத்தத்தில் சோடியம் அளவை குறைக்கும். இதனால் உயர் இரத்த அழுத்தம் உண்டாகாமல் வாழைப்பழம் தடுக் கும் என்பது நல்ல விடயம். ஏறக்குறைய எல்லா பழங் களிலும் காபோவைதரேட் உள்ளது. வாழைப்பழத்திலும் குறைந்த அளவு காபோவைதரேட்தான் உள்ளது. ஆகவே நீங்கள் வாழைப் பழத்தை தாராளமாகச் சாப்பிடலாம். வியாதி இல்லாமல் வாழ்வதே ஒரு வரம். இன்று வரும் இன்பத்திற்காக வாழ்நாள் முழுவதும் துன்பத்தை தேடிக் கொள்ளாதீர்கள். எதையும் அளவோடு சாப்பிட்டால் வளமோடு வாழலாம். தீயவைகளிடமிருந்து தள்ளியிருங்கள். இந்த மந்திரத்தை மனதில் வைத்து கடைப்பிடித்தால் நோயில்லாமல் நீங்கள் ஆரோக்கியமாக வாழலாம்.

Health Care
## மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# திருவிழாவில் திடீர்க்கலவரம் நெரிசலில் சிக்கி 52 பேர் பலி!





(அடிடாஸ் அபாபா)

எதியோப்பியா நாட்டில் கடவுளுக்கு நன்றியுடன் காணிக்கை செலுத்தும் திருவிழாவில் ஏற்பட்ட கலவரத்தை கட்டுப்படுத்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டுக்கு பயந்து ஓடிய 52 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர்.

கிழக்காப்பிரிக்க நாடுகளில் ஒன்றான எதியோப்பியாவில் உள்ள ஒரோமியா மாகாணத்தில் ஆண்டுதோறும் கடவுளுக்கு நன்றியுடன் காணிக்கை செலுத்தும் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

இங்குள்ள பிஷோஃப்டு நகரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்த திருவிழாவில் சுமார் 20 இலட்சம் மக்கள் திரண்டனர்.

திருவிழாவுக்காக அமைக்கப்பட்டிருந்த மேடையில் முக்கிய தலைவர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் இருந்த சிலர் அந்த தலைவரை எதிர்த்தும், அரசை கண்டித்தும் கூச்சலிட்டனர்.

கூச்சலிட்டவர்களை எதிர்த்து அரசின் ஆதரவாளர்கள் குரல் எழுப்பினர். இதனால் அங்கு இருதரப்பினருக்குஇடையே ஏற்பட்ட மோதல், பெரும் கலவரமாக வெடித்தது.

இருதரப்பு ஆதரவாளர்களும் சரமாரியாக தாக்கிக் கொண்டனர். அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கலவரத்தை கட்டுப்படுத்த தடியடி, கண்ணீர் புகை ஆகியவற்றை பிரயோகித்து கூட்டத்தை கலைக்க முயன்றனர்.

இந்த முயற்சி பலனளிக்காததால் இறப்பர் குண்டுகளை பயன்படுத்தி கலவரக் காரர்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினர். நிலைமை மோசமடைந்ததால் உயிர்ப் பயத்துடன் இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

அனைவரும் ஒரே திசையை

நோக்கி ஓடியதால் சிலர் கால்இடறி கீழே விழுந்தனர். அவர்களுக்கு பின்னால் அவசரமாக ஓடிவந்த பலர் விழுந்து கிடந்தவர்களை மிதித்தபடி ஓடமுயன்று, நிலை குலைந்து கீழே சரிந்தனர். அவர்களுக்கும் பின்னால் இருந்து வேகமாக ஓடிவந்த பலர் கீழே விழுந்து கிடந்தவர்களை மிதித்தபடி தப்பியோடினர்.

இந்த மிதிபாட்டில் சிக்கி 52 பேர் பலியானதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. இந்த தள்ளு முள்ளில் மிதிபட்ட பலர் வைத்தியசாலைகளில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)




## சீனாவில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

சீனாவில் எதிர்வரும் 2020 இல் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் எண்ணிக்கை 24 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

சீனாவில் 60 வயதுக்கு மேல் உள்ளவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயுள்ளது. எதிர்வரும் 2020இல், சிரேஷ்ட குடிமக்களின் (60 வயதுக்கு மேற்பட்டோர்) எண்ணிக்கை மட்டும் ஒட்டு மொத்த மக்கள் தொகையின் 17 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சீனாவின் தேசிய நலத்துறை அதிகாரி லியு கூறுகையில்,

சீனாவின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 26 கோடி பேர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுதான் 86 சதவீதம் சீன மக்களின் இறப்புக்கு முக்கிய காரணமாக உள்ளது.

தவிர சிரேஷ்ட எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயுள்ளது என்றார். (இ-7)

## அலெப்போ வைத்தியசாலை மீது பீப்பாய் குண்டு வீசித் தாக்குதல்

### அமெரிக்க ஜனாதிபதி கடும் கண்டனம்





சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் பிடியின்கீழ் உள்ள அலெப்போ நகரின் பல பகுதிகளிலும் ரஷ்ய படையினரின் பேராதரவுடன் சிரியாவின் ஜனாதிபதி ஆதரவு படையினர், கிளர்ச்சியாளர்களை எதிர்த்து கடுமையாக சண்டையிட்டு வருகின்றனர்.

ஒரு பக்கம் வான்வழி தாக்குதலும், மற்றொரு பக்கம் தரை வழி தாக்குதல்களும் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டுமே இந்த சண்டையில் குழந்தைகள் உட்பட 400 அப்பாவி பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் அந்த நகரில் பீப்பாய் குண்டுகளை வீசியதில், நகரின் மிகப் பெரிய வைத்தியசாலையில் பெருத்த சேதத்தை அடைந்துள்ளது. கட்டடங்கள் மட்டுமல்லாது, சாதனங்களும் நாசமாகி உள்ளன. இதன் காரணமாக செயலிழந்த நிலையில், அந்த வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. இந்த தாக்குதல்களில் நோயாளிகள் 2 பேர் உயிரிழந்ததாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதை அந்த வைத்தியசாலையை நிர்வகித்து வருகிற சிரிய அமெரிக்க வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது. அந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்கள், அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அருகில் உள்ள பிற வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். வைத்தியசாலை தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சார்பில் அவரது செய்தி தொடர்பாளர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஜீன் மார்க் ஆய்ராலட்டும் கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-7)

## குண்டுஸ் நகரை கைப்பற்றுவதற்கு தலிபான்கள் உச்சக்கட்ட தாக்குதல்



ஆப்கானிஸ்தான் நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் உள்ள குண்டுஸ் நகரை கைப்பற்றும் நோக்கத்தில் அரசுப் படைகளை எதிர்த்து அங்குள்ள தலிபான் தீவிரவாதிகள் உச்சக்கட்ட தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் முன்னர் அரசுப்படைகளிடம் பறிகொடுத்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதில் இங்குள்ள தலிபான் தீவிரவாதிகள் தற்போது மும்முரம் காட்டி வருகின்றனர்.

நாட்டின் தென்பகுதியில் உள்ள ஹெல்மன்ட் மாகாணத்தின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ள தலிபான்கள் தற்போது வடக்கில் உள்ள குண்டுஸ் நகரை கைப்பற்றுவதில் முனைப்பு காட்டி வருகின்றனர்.

இதில் ஒருகட்டமாக, ஐ.எஸ் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள முக்கிய பகுதிகளை ஆக்கிரமிக்கும் நோக்கத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு குண்டுஸ் நகரை நோக்கி ஆயுதமேந்திய தலிபான் தீவிரவாதிகள் முன்னேறி சென்று கொண்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்நகரின் நாற்புற நுழைவு வாயில்களின் வழியாக ரொக்கெட் வீசும் ஏவுகணைகள், சிறியரக பீரங்கிகள் மற்றும் இயந்திர துப்பாக்கிகளுடன் முன்னேறிவரும் தலிபான் தீவிரவாதிகளை எதிர்த்து அரசுப்படைகள் ஆவேசத் தாக்குதல் நடத்தி வருவதாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# ஆப்கானிஸ்தானில் குண்டு வெடித்ததில் 6 பேர் மரணம்



ஆப்கானிஸ்தானில் ஜவுஸியா மாகாணத்தில் உள்ள ஒரு சந்தையில் நேற்று சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் 6 பேர் அதே இடத்தில் பலியாகினர். 80 பேர் காயம் அடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் இதை தலிபான் தீவிரவாதிகள் நிகழ்த்தியிருக்கலாம் என இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-7)

# காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க முடியாது

## மத்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

**இந்திய உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு உடனடியாக காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

முன்னதாக, உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஒப்புக்கொண்ட மத்திய அரசு, காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த சூழலில், திடீர் திருப்பமாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது. காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டிய காலக்கெடு முடிவடைய இருக்கும் நேரத்தில் இவ்வாறு தெரிவிப்பது ஏன் என்று நீதிபதிகள் வினா எழுப்பியபோது, இதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்தில் தான், எழுகின்ற சிக்கல்களை நாடாளுமன்ற அனுமதியோடு மேற்கொள்ள வேண்டியுது தெரியவருகிறது என்று மத்திய அரசு பதிலளித்துள்ளது.

கருணாநிதி கண்டனம்

இந்நிலையில், இந்திய உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு உடனடியாக காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க முடியாது என மத்திய அரசு கூறியிருக்கும் விவகாரத்திற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக கருணாநிதி வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில், "மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம். ஆனால் கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது?" என்பதைப் போல மத்திய அரசின் செயற்பாடுகள் உள்ளன என விமர்சனம் செய்துள்ளார்.

மேலும், விரைவில் கர்நாடக மாநிலத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை மனதில் கொண்டே, மத்தியில் ஆட்சியில் இருப்போர் இந்தத் திடீர் முடிவினை, நடுநிலைமை தவறி எடுத்து, முழுக்க முழுக்க கர்நாடகாவின் குரலை எதிரொலிக்கும் ஊது குழலாக செயற்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (இ-7)

# கலிபோர்னியாவில் இராட்சத பூசணிக்காய் கண்காட்சி; 882 கிலோ எடை கொண்ட பூசணிக்கு முதல் பரிசு

(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் மிகப் பெரிய அளவுடைய பூசணிக்காய்களுக்கான கண்காட்சி நடத்தப்பட்டது. எல்க் குரோவ் நகரில் 22ம் ஆண்டாக இராட்சத பூசணிக்காய் கண்காட்சி நடத்தப்பட்டது.

மாகாணத்தின் பல்வேறு இடங்களில் இருந்து மிகப் பெரிய அளவிளான பூசணிக்காய்கள் கண்காட்சிக்கு கொண்டு வரப்பட்டன.

450 கிலோவிற்கும் அதிக எடையுடைய பூச்ணிக்காய்களே கண்காட்சியில் அதிகளவில் இடம்பெற்றன.

போட்டியாளர்கள் தாங்கள் விளைவித்த பூசணிக்காய்களை வாகனங்கள் மூலமே கொண்டு வர முடிந்தது.

கண்காட்சியின் இறுதியில் நடத்தப்பட்ட போட்டியில் 882 கிலோ எடையுள்ள பூசணியைக் கொண்டு வந்த போட்டியாளர் முதல் பரிசை தட்டிச் சென்றார். இவருக்கு ஒரு பவுண்டிற்கு 7 டொலர் வீதம் மொத்தமாக 13,600 டொலர் பரிசு வழங்கப்பட்டது.



போட்டியில் வைக்கப்பட்ட முதல் 3 பூசணிக்காய்களை படகு போல வடிவமைத்து, பயன்படுத்த கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர். (இ-7)

# இந்தியாவை பாகிஸ்தான் பதிலுக்கு மிரட்ட வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி முஷரப் ஆவேசம்

இந்தியாவை பாகிஸ்தான் பதிலுக்கு மிரட்ட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி முஷரப் ஆவேசமாக கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷரப் (வயது- 73). முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் சிக்கி தவித்தார். இதன்காரணமாக அவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த தடை, கடந்த மார்ச் மாதம் உச்ச நீதிமன்ற உத்தரவால் விலக்கிக் கொள்ளப்பட்டது.


அதைத் தொடர்ந்து அவர் தனது முதுகுத்தண்டில் பிரச்சினை இருப்பதாகவும், அதற்கு சிகிச்சை பெறச் செல்வதாகவும் கூறி டுபாய்க்கு சென்றார். அதன்பிறகு அவர் நாடு திரும்பவில்லை.

இந்த நிலையில் அவர் தனது அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் 6ஆவது நிறுவன நாளையொட்டி, கட்சி தொண்டர்களுடன் தொலைபேசி வழியாக பேசினார். அப்போது அவர் இந்தியாவின் அணுகுமுறையையும், பிரதமர் நரேந்திர மோடியையும் வெகுவாக சாடினார்.

மோடி, இந்தியாவில் வாழ்கிற சிறுபான்மை மக்களின் எதிரி என விமர்சித்தார்.

"இந்தியா, பாகிஸ்தான் மீது மிரட்டல் விடுவதில்தான் நல்ல நாடு. பாகிஸ்தான், பூட்டான் அல்ல என்பதை இந்தியா உணர வேண்டும். இந்திய மண்ணில் எப்போது பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றாலும், பாகிஸ்தானை நோக்கி குற்றம் சாட்டுவதை இந்தியா வழக்கமாக்கிக்கொண்டு விட்டது" என்று மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீனாவில் 953 கலைஞர்கள் பங்கேற்ற இசை நிகழ்ச்சி கின்னஸ் சாதனையை முறியடித்து சாதனை படைத்தது



(பீஜிங்)

சீனாவில் 953 கலைஞர்கள் பங்கேற்று நிகழ்த்திய இசை நிகழ்ச்சி இதற்கு முந்தைய கின்னஸ் சாதனையை முறியடித்து சாதனை படைத்துள்ளது

சீனாவில் உலக அளவில் புதிய கின்னஸ் சாதனை படைக்க மாபெரும் பிரமாண்ட இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தலைநகர் பீஜிங்கில் உள்ள மியூசிக் அக்கடமியில் நடத்தப்பட்டது.

இதில் 953 இசைக்கலைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் பாடகர்கள் 349 பேரும், கிட்டார் வாசிப்பவர்கள் 154 பேரும், டிரம் இசைக்கலைஞர்கள் 151 பேரும், கீ போர்டு வாசிப்பவர்கள் 100 பேரும் மற்றும் பலரும் அடங்குவர்.

அதிக இசைக்கலைஞர்கள் சேர்ந்து நடத்தியதால் இது கின்னஸ் சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பு 2013 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி 520 பேர் நடத்திய இசை நிகழ்ச்சி மிக பிரமாண்டமாக கருதப்பட்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றிருந்தது.

தற்போது 953 கலைஞர்கள் இணைந்து நடத்திய இசை நிகழ்ச்சி அந்த சாதனையை முறியடித்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. (இ-7)

# பாகிஸ்தான் உளவுத்துறையை கண்டித்து காஷ்மீரில் போராட்டம்

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் உளவுத்துறை (ஐ.எஸ்.) இணைந்து நீண்ட காலமாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றன. இந்த அடக்குமுறைக்கு எதிராகவும், பாகிஸ்தானிடம் இருந்து விடுதலை வேண்டியும் அங்கு ஏராளமான தலைவர்கள் போராடி வருகின்றனர்.

இவர்களை பாகிஸ்தான் இராணுவமும், ஐ.எஸ்.தீவிரவாதிகளும் சேர்ந்து கொலை செய்து வருவதாக புகார்கள் எழுந்து வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டுமே 100 இற்கும் மேற்பட்ட தலைவர்கள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

இதனால் மனக்கசப்பில் இருந்து வரும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மக்கள், இராணுவம் மற்றும் உளவுத்துறையின் அட்டூழியங்களை கண்டித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.




அந்த வகையில் கோட்லி நகரை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் நேற்று முன்தினம் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். 'காஷ்மீர்களின் கசாப்புக்காரன், பாகிஸ்தான் இராணுவம்', 'ஐ.எஸ்.ஸை விட நாய்கள் அதிக விசுவாசத்துடன் இருக்கும்' என்பது போன்ற கோஷங்களை எழுப்பியவாறே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இராணுவம் நடத்தி வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சமீபத்தில் கவலை வெளியிட்டிருந்த அமெரிக்கா, அங்கு மக்களிடையே நிலவும் அதிருப்திக்கு அமைதியான முறையிலும், அரசியல் ரீதியாகவும் தீர்வு காணுமாறு பாகிஸ்தானை கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காஷ்மீர் எல்லையில் பதற்றம் அதிகரிப்பு இராணுவ முகாமை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல்


ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பாரமுல்லா பகுதியில் இராணுவ முகாமை குறிவைத்து பயங்கரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதலில் ஈடுபட்டனர். இதேவேளை இராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.

இதனிடையே, பாகிஸ்தான் இராணுவத்தினர் ஜம்மு-காஷ்மீரின் அக்னூர் பகுதியில் அத்துமீறி துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டனர். எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் கடந்த ஐந்து நாட்களில் பாகிஸ்தான் 6 ஆவது முறையாக அத்துமீறலில் ஈடுபட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியவில் இந்த தாக்குதல் தொடங்கியது. இந்திய இராணுவம் தரப்பில் அதற்கு பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது. (இ-7)

# அடுத்த வரவு-செலவு திட்டத்தில் புதிய வரிகள் அறிமுகமாகும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கைத்தொழிற்றுறைகளில் மேற்கொள்ளப்படும் பாரிய, நடுத்தர மற்றும் சிறிய தரத்தில், முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக, சுற்றுலாத்துறையும் மேம்படும் என்று தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் (பாதீடு), புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை - நியூசிலாந்து வர்த்தகப் பேரவையில் வைத்து, முதலீட்டாளர்களை கடந்த சனிக்கிழமை சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நியூசிலாந்துப் பிரதமர், இலங்கைக்கு கடந்த பெப்ரவரி மாதம் விஜயம் மேற்கொண்டிருந்த போது, கைத்தொழிற்றுறையை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினோம். விசேடமாக, நியூசிலாந்து நிறுவனங்கள் முதலிடுவது குறித்தே அப்போது பேசப்பட்டது. இவ்வாறான நிலையில், நியூசிலாந்தில் இருக்கின்ற இலங்கை நிறுவனங்கள், இலங்கையில் என்ன செய்யலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய சந்தை மற்றும் புதிய உற்பத்திகள் தொடர்பில் கண்டறியப்படல் வேண்டும். இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆகையினால், புதிய முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில், புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்படும். தண்ணீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் காணிக்கான குத்தகை என்பன, இன்னும் பிரச்சினையாகவே இருக்கின்றன. அவை தொடர்பில் கலந்தாலோசித்து, தீர்வு காணப்படல் வேண்டும். முதலீடு செய்வதற்கு புதிய இடங்களை தேடிக் கொண்டிருக்கின்றோம். தனியார்துறைகளைப் பார்க்கின்றோம். இவ்வாறிருக்கையில், நியூசிலாந்தில் இருக்கின்ற இலங்கை முதலீட்டாளர்களால், ஏன் இலங்கைக்கு வரமுடியாது. முதலீடுகளைப் பற்றி பேசுகின்ற நான், எவ்விதமான முதலீட்டையும் செய்ததில்லை என்று பலரும் எண்ணக்கூடும். அவ்வாறல்ல, முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வதே முக்கியமானதாகும். விவசாயத் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. கிராமிய விவசாயத் துறையை, தற்போது வளர்ந்துவரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவகையில் மாற்ற வேண்டும். நிர்மாணத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதற்கமைவாக நிதித்துறைசார் நகரத்தை உருவாக்கவேண்டும். ஆகையால், கிடைத்திருக்கின்ற இந்த அருமையான சந்தர்ப்பத்தை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பது தொடர்பில், - முதலீட்டாளர்கள் கவனஞ்செலுத்தி, கரிசனை காட்டவேண்டும் என்று, பிரதமர் இதன்போது வலியுறுத்தினர். (இ-7)

# அமைச்சர் மங்கள சமரவீர அரசியலுக்கு முற்றுப்புள்ளி



வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கவுள்ள அவர் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவிக்கு செல்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலில் தற்போது சில அவப்பெயர்களை சந்தித்து வரும் அமைச்சர், ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவியை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நாட்டு அரசியலை விட சர்வதேச அரசியலிலே தனக்கு சுதந்திரமாக செயற்பட முடியும் என அமைச்சர் தனது நெருங்கிய நண்பர்களிடம் தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய 2020ஆம் ஆண்டளவில் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது உள்நாட்டு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பார் என நம்பப்படுகின்றது. (இ-7)

# டுபாயில் நீரில் மூழ்கிய இரு இளைஞர்கள் பலி

டுபாயில் கடலில் நீராடச்சென்ற இலங்கையர்கள் இருவரும் இந்தியர் ஒருவரும் பலியாகியுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

எனினும் சார்ஜா கடலில் மூழ்கிய மற்றும் ஒரு எகிப்திய பிரஜை மகன் நண்பர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

கடல் கொந்தளிப்பு அதிகமானதன் காரணமாகவே இந்த உயிரிழப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (இ-7)

# நீதிபதியின் முறைப்பாடு தொடர்பாக பிரதம நீதியரசருடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சிரான் குணரட்னவின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகவும், மின்னஞ்சல் தகவல்கள் இரகசியமாக பார்க்கப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிபதி சிரான் குணரட்ன, இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்தில் எழுத்துமூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் இணையத்திலும் சில ஊடகங்களிலும் வெளியான தகவல்களையும் அவர் இந்த முறைப்பாட்டுடன் இணைத்துக்கொண்டுள்ளார்.

தமது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகவும் மின்னஞ்சல் கணக்கு ஊடுருவப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் பிரதம நீதியரசர் கே.சிறிபவனுடன் எதிர்வரும் 10ஆம் திகதி கலந்துரையாடவுள்ளதாக, மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் நீதிபதி சிரான் குணரட்ன எடுக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் உறுதியளித்துள்ளது. (இ-7)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு; மாணவர்கள் மூன்று பேர் கைது

(கொழும்பு)

பதுளை மாவட்டம், எல்ல, உடுவர பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் 16 மற்றும் 14 வயதானவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் வர்த்தக நிலையத்தின் பூட்டினை உடைத்து அங்குள்ள பொருட்கள் மற்றும் பணத்தினை கொள்ளையடித்துள்ளதாக வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதனையடுத்து நேற்று முன்தினம் குறித்த மூன்று மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் கொள்ளையிட்ட பணத்தினை செலவு செய்துள்ளதோடு, திருடிய பிஸ்கட் மற்றும் மென்பான ங்களை அருந்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

சந்தேகநபர்களை பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்ய அவகாசம்

பல்வேறு காரணங்களினால் இதுவரையில் பதிவு செய்யப்படாதுள்ள மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கு நான்குமாத கால அவகாசத்தை வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி அறிவித்துள்ளார்.

இந்த அவகாச காலம் நேற்றுமுதல் ஆரம்பமாகி எதிர்வரும் 2017 ஜனவரி வரையில் நடைமுறையில் இருக்கும் என ஆணையாளர் தெரிவித்தார்.

பதிவு செய்வதற்குரிய சகல ஆவணங்களும் எடுத்து வரப்படல் வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை 011 536 3592 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எம்.டி.நவாஸிடம் தீவிர விசாரணை

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவினால் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நீதிபதி நவாஸ், சட்டமா அதிபர் திணைக்களத்தில் பிரதி சொலிசிட்டர் ஜெனரலாக கடமையாற்றிய காலத்தில், செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்று தொடர்பில் ஆரம்ப விசாரணை நடத்தி வழக்குத் தொடர்ந்த விதம் குறித்துசட்டமா அதிபர்திணைக்களம் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

நவாஸின் கீழ் கடமையாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலரிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே நீதிபதி நவாஸிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நவாஸிற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பதவியை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இல்லத்தை அழகுபடுத்தும் தீவிர முயற்சியில் ரஞ்சன்

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தனது உத்தியோகபூர்வ இல்லத்தை அழகுபடுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் திருமண பந்தத்தில் இணைவதற்காக இருக்கலாம் என அரசியல்வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த விடயத்தை சபாநாயகர் கரு ஜயசூரிய நேரடியாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு வினவியுள்ளார்.



அதன் போது பிரதியமைச்சர் இருக்கின்ற இத்தை அழகாக வைத்துக் கொள்வது நல்லது தானே என்று தெரிவித்துள்ளதுடன், ஆனால் இதற்கு தனது சொந்தப்பணத்தில் செலவு செய்துவருவதாகவும், திருமணம் முடித்து குழந்தைகள் பெற்றவர்கள்தமதுகுழந்தைகளை பாடசாலையில்சேர்ப்பதற்கு படும் பாட்டைப் பார்த்தால் திருமண வாழ்க்கையே வேண்டாம் என்று எண்ணத் தோன்றுகிறது என்று கூறியுள்ளார்.

இதற்கு இல்லை அப்படியாயின் நாங்கள் உங்களுக்கு உதவி செய்கிறோம் என சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்திருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எனினும் பல முக்கிய கலைஞர்கள் தனது வீட்டிற்கு வரும்போது இலங்கை சுப்பர்ஸ்டார் ஒருவரின் வீடு இவ்வாறாக இருக்கும் என்று எண்ணுவதால் தனது வீட்டினை புதுப்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த வீட்டிற்கு பல உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் வருகை தருவதால் தனது சொந்த செலவில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வீட்டினை புதுப்பித்தல் மற்றும் அழகுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அவரது நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# 51561 குடும்பங்கள் வரட்சியால் பாதிப்பு!

(கொழும்பு)

வரட்சியான காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தைத் தாண்டியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. இதன்படி, 7 மாவட்டங்களில் 51,561 குடும்பங்களைச் சேர்ந்த 208,107 பேர் இவ்வாறு கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து நிலவும் வரட்சியினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)



# வணங்கி மன்றாடும் இனமல்ல நாங்கள்



## மகிந்த ராஜபக்ஷ இறுமாப்பு அடுத்து விமலே கைதாவார்

அடுத்து கைது செய்யப்படப் போவது தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவே என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை அச்சுறுத்தல்களை பிரயோகித்தாலும் வணங்கி மன்றாடும் இனமல்ல நாங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

வெலிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நான் நிர்மாணித்தவற்றை இன்று அவர்கள்செய்ததனைப்போன்று அங்குரார்ப்பணம் செய்கின்றார்கள்.

இதுவே இன்றைய புதிய விளையாட்டாக அமைந்துள்ளது. நாம் எதனையும் செய்யவே இல்லைப் போலும்.

அழகான விடயம் என்னவென்றால் இன்று எம்மை குறை சொல்லுகின்றவர்கள் எமது அமைச்சரவையில் அமைச்சுப் பதவி பெற்றுக் கொண்டு பதவி வகித்தவர்களாவர்.

நான் இப்போது நினைக்கின்றேன் இவ்வாறான நபர்களுடன் அல்லவா நான் அமைச்சரவையில் இருந்திருக்கின்றேன் என்று இத்தோடு போனது நல்லதுதான்.

எம்மை சிறையில் அடைப்பார்கள். எமது பிள்ளைகளை சிறையில் அடைப்பார்கள். அதனை கண்டு கொள்ள வேண்டியதில்லை.

இன்னும் கொஞ்ச நாட்களில் விமல் வீரவன்ச பைகளை எடுத்துக் கொண்டு ஆயத்தமாகுங்கள். அடுத்து நீங்களே சிறைக்கு செல்ல வேண்டியுள்ளது. எனினும் எல்லாவற்றிற்கும் ஓர் எல்லையுண்டு.

சுவருக்கு அருகாமை வரையில் எம்மை தள்ளிச் செல்கின்றார்கள். அது வரையில் நாம் பின்வாங்குவோம்.

எனினும் சுவரில் சாய்ந்ததன் பின்னர் வணங்கி மன்றாடும் இனமல்ல நாங்கள் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்

## ஜனாதிபதி மைத்திரி அறிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களின் வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தசாப்தத்தில் அனைத்து இலங்கையர்களினதும் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் அபிலாஷையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

பண்டைய மனிதர்கள் குடும்பத்தின் பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ள ஆறுகள், குளங்களுக்கு அருகாமையில் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர்.

அதன் பின்னர் மனிதனின் ஒட்டுமொத்த அபிவிருத்தி கேந்திர மையமாக வீடு அமைந்தது.

அதேபோல் பொருளாதார, சமூக மற்றும் ஆன்மீகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பிரதான காரணிகளில் ஒன்றாக வீடு அமைந்துள்ளது.

இம்முறை உலக குடியிருப்பு தினம் "வீடமைப்பிற்கு முன்னுரிமை" என்ற தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

வீட்டுக்கும் மானுட அபிவிருத்திக்கும் இடையிலான உறவுகளை கருத்திற் கொண்டே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை ஆழமாகப் புரிந்து கொண்டுள்ள அரசாங்கம் அனைத்து இலங்கையர்களுக்கும் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது என ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு ஏழு விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு புதிதாக ஏழு விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமான சேவை கடந்த சில வருடங்களாக நட்டத்தில் இயங்கி வருகின்றது.

இதன் காரணமாக அண்மையில் இந்த விமான சேவைக்குச் சொந்தமான நான்கு விமானங்கள் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு மேலும் ஏழு விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு, தொட்டலங்க பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நட்டத்தில் இயங்கிய போதிலும்தேசிய விமான சேவையை நடத்திச் செல்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அதன் காரணமாகவே புதிதாக ஏழு விமானங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## யாரால் நடக்கிறது?

சில சமயங்களில் பங்குதாரர்களுக்கு உள்ளேயும், கணவன்– மனைவிக்கு இடையேயும், மேல் அதிகாரிகளுக்கும் கீழேயும் உள்ளவர்களுக்கு மத்தியில் ஒரு போர் நடக்கும்.

அதாவது, தொழிலும், பிழைப்பும் நம்மால்தான் நடக்கிறது என்றும், காலம் ஓடுவது தங்களுடைய தனி முயற்சியால்தான் என்றும் ஒரு பகுதியினர் எண்ண ஆரம்பித்து, அதைச் செயலிலும், பிறகு பேச்சில் குத்தலாகவும் காண்பிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

முடிவு? பூசல்கள், பிணக்குகள். விளைவு? வண்டி நின்றுவிடும். அல்லது தறிகெட்டு ஓடும்.

இந்தச் சந்தேகமும் விபரீத நினைப்பும் வருவது நமக்கு நல்லதல்ல என்பதை இரு சாராரும் உணர வேண்டும்.

இருவரின் உழைப்பும் முயற்சியும் சமமாக இருக்க வேண்டும் என்பதென்னவோ நியாயமான வாதம்தான். ஆனால் சூழ்நிலை அமைப்புக்கள், குறிப்பிட்ட மனிதர்களின் குணக்குறைபாடுகள் ஆகியவை காரணமாக இது பெரும்பாலான சமயங்களில் அந்த விகிதங்கள் சரிசமமாக இருக்கவே சாத்தியமில்லை.

பல சந்தர்ப்பங்களில் இது 60 சதவிகிதம் 40 சதவிகிதம் ஆகவும் –ஏன் 75 சதவிகிதம் 25 சதவிகிதம் ஆகவும் கூட அமைந்து விடுவதுண்டு. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மெல்ல அதைத் தன்னோடு இணைந்து இருப்பவர்களுக்கு உணர்த்தி, அவர்கள் பங்கை அதிகரிக்கச் செய்ய வேண்டுமே தவிர , தன்னால்தான் எல்லாமே நடக்கிறது என்கிற பாணியில் நடந்தும் பேசியும், இருப்பதையும் கெடுத்துக் கொள்ளலாகாது.

தன் பங்கு எத்தனை சதவிகிதம் என்கிற உண்மையையெல்லாம் ஆராய்ச்சி செய்வது இருக்கிற தொடர்புகளை மோசமடையவே செய்யும். அதுவே குடும்பமாக இருந்துவிட்டால் சார்ந்திருக்கிற குழந்தைகள் பாடு படு அவதி தான்.

என்னால்தான் எல்லாம், உன்னால் ஒரு புண்ணியமும் இல்லை என்று எதிராளி வெளிப்படையாகக் குற்றம் சாட்டினால், இப்படி ஒரு நினைப்பும் எண்ணமும் அவர்களுக்கு ஏன் ஏற்படாது? அவர்களது குற்றச்சாட்டில் உண்மையின் சதவிகிதம் எத்தனை? இப்படிப்பட்ட நினைப்பிற்கு நாம் ஏன் இடந் தந்தோம்? என்றெல்லாம் சிந்திப்பது பயனுள்ள சிந்தனை.

சிலருக்கு மோதிப் பார்ப்பதில் ஆசை. அவற்றின் விளைவுகளைச் சிந்திக்கும் பக்குவம் இவர்களிடத்தில் இருப்பதில்லை. பாவம் இவர்கள்!

தன் பங்கு எந்த விகிதத்திலும் சளைத்ததல்ல என்று ஒருவர் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நம்பினால், உடனே அவர் ஒத்துழைத்து அந்த உண்மையை உணர வைப்பதா, ஒத்துழைக்காமல் உணர வைப்பதா? என்பதில் முதலில் தெளிவடைய வேண்டும்.

இரண்டாவது வழி என்றால், திட்டமிட்ட சதி போன்று தெரியாதபடி ஒத்துழையாமை இயக்கத்தை மெல்ல ஆரம்பிக்க வேண்டும். வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதபடி பொருளாதார ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தரும் ஒத்துழைப்பைக் குறைக்க வேண்டும்.

எதிராளிக்குத் தன்னால்தான் எல்லாம் என்கிற நினைப்பு மெல்ல அழிய ஆரம்பித்ததும் ஒத்துழைப்பை அதிகப்படுத்தி , இவரை விட்டால் வேறு ஆள் நமக்கு இல்லை என்று தீர்மானமான முடிவுக்கு வரும்படி செய்ய முடியும்.

**லேனா தமிழ்வாணன்**




# ஆமையும் அழகிய பெண்ணும்

இளவரசன் தன் தாயிடம் சென்று, ஆமை அழகி பற்றிக் கூறினான்.

அவருக்கும் அரசரின் பிடிவாத குணம் பற்றிய வெறுப்பு இருந்தது.

அவர், அரசருக்குத் தெரியாமல் அந்த ஆமைக் குடும்பத்தின் வீட்டுக்குச் சென்று அந்தப் பெண்ணைப் பார்க்க முடிவு செய்தார்.

உடை, உணவு வகைகள் மற்றும் தங்க நகைகளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

தன் மகனான இளவரசன் திருமணம் செய்துகொள்ள விரும்பிய ஆமையின் மகளைப் பார்த்தார்.

தான் கொண்டு வந்திருந்த பொருட்களையும் கூடவே ஆலிவ் எண்ணெயையும் அந்த அழகிக்குப் பரிசளித்தார்.

அந்த ஆமையிடம், "என் மகனே, உன் மகளை மணந்து கொள்வான், வேறு யாருக்கும் அவளை மணம் பேச வேண்டாம்" என்று உறுதியாகக் கூறினாள்.

ஆமையும் அரசியிடம், அப்படியே தான் காத்திருப்பதாகவும் வேறு யாருக்கும் தனது அழகிய மகளை மணமுடித்துக் கொடுக்க மாட்டேன் எனவும் மறு உறுதி அளித்தது.

ஐந்து ஆண்டுகள், அரசி அந்த ஆமையையும் தன்



மகனின் வருங்கால மனைவியான ஆமையின் அழகிய மகளையும் தொடர்ந்து சந்தித்து வந்தாள்.

அதைத் என்பது அந்த ஆமை அழகியின் பெயர்.

ஒரு நல்ல தருணத்தில் அவன் தன் தந்தையான மன்னரிடம் தான் ஆசைப்பட்ட ஆமை அழகி பற்றிச் சொன்னான். அதைக் கேட்டதும் மன்னன் கடும் கோபம் கொண்டான். உடனே மக்கள் அதிகம் கூடும் சந்தைப் பகுதிக்கு அந்த ஆமைக் குடும்பத்தினை இழுத்து வரும்படி தன் படைத் தளபதிக்குக் கட்டளை இட்டான்.

படைத் தளபதியும் தன் வீரர்கள் சிலருடன், ஆமைக் குடும்பத்தை இழுத்து வரப் புறப்பட்டுச் சென்றான்.

நாட்டின் மக்கள் எல்லோரும், அதற்குள் செய்தி அறிந்து சந்தைப் பகுதியில் கூட்டமாகச் சேர ஆரம்பித்து விட்டனர்.

இளவரசனோ இருதலைக் கொள்ளி எறும்பாகத் துடிக்க ஆரம்பித்தான்.

ஆமை அழகியையும் அதன் குடும்பத்தினரையும் நிச்சயம் கொன்று விடுவார்கள் என்று வருந்தத் தொடங்கினான்.

மன்னனோ எந்த விதச் சலனமும் காட்டாமல் இருந்தான்.

படைத் தளபதியும் வீரர்கள் சிலரும் ஆமைக் குடும்பத்தை இழுத்து வந்தனர்.

என்னே ஆச்சர்யம்!

ஆமை அழகியின் அழகு எல்லோரையும் மயங்கச் செய்வதாய் இருந்தது.

இப்படி ஓர் அழகி இந்த நாட்டில் இருந்தாளா என்று மக்கள் தங்களுக்குள்ளேயே பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்.

சிலரோ, இந்த அழகிய பெண் இவ்வளவு நாள் எங்கே ஒளிந்திருந்தாள் என்று வாய் விட்டே, பலரும் கேட்கும்படிக் குரல் எழுப்பினர். அதில் பல குரல்கள் வயிற்று எரிச்சலாய் தெரிந்து விழுந்தன.

மன்னன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

கொடுமைக்கார மன்னனான அவன் தன் முன்னால், படைத் தளபதி கொண்டு வந்த நிறுத்திய ஆமையின் மகளைப் பார்த்தான்.

அவனுக்கும் ஆச்சரியம் தொற்றிக் கொண்டது.

அவன் வாழ்நாளில் அப்படி ஒரு அழகியை அவன் பார்த்ததில்லை.

உலகத்திலேயே இவள் தான் சிறந்த அழகி என்பதில் கொஞ்சமும் ஐயம் இருக்காது என்பதை அவன் உணர்ந்தான்.

ஆனால் அவன் என்ன முடிவு எடுக்கப் போகிறான் என்பதைத் திகிலுடன் எதிர்நோக்கியவாறு இருந்தது ஆமைக் குடும்பம்.

இளவரசனுக்கும் பயமாகத்தான் இருந்தது.

(தொடரும்)

## 10.2016 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1209 - நான்காம் ஒட்டோ புனித ரோமப் பேரரசனானான்.
- 1537 - மத்தியூ பைபிள் எனப்படும் முதலாவது முழுமையான ஆங்கில விவிலிய நூல் அச்சிடப்பட்டது.
- 1777 - அமெரிக்கப் புரட்சி: பிலடெல்பியாவின் ஜெர்மண்டவுன் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஜோர்ஜ் வோஷிங்டனின் படைகளை சேர் வில்லியம் ரோவின் பிரித்தானியப் படைகள் தோற்கடித்தன.
- 1824 - மெக்சிக்கோ குடியரசு ஆகியது.
- 1830 - பெல்ஜியம் நெதர்லாந்து நாட்டில் இருந்து பிரிந்து தனிநாடாகியது.
- 1853 - கிரிமியப் போர்: ஒட்டோமான் பேரரசு ரஷ்யா மீது போரை அறிவித்தது.
- 1883 - ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் கடுகதி தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1918 - நியூஜெர்சியில் ஷெல் கம்பனியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா சொலமன் தீவுகளைக் கைப்பற்றியது.
- 1957 - பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிக்கு நடை பயணம் நடத்தப்பட்டது.
- 1957 - முதலாவது செயற்கைச் செய்மதி ஸ்புட்னிக் -1 பூமியைச் சுற்றி வர விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1959 - லூனா 3 விண்ணுக்கு ஏவப்பட்டது. இது சந்திரனைச் சுற்றி வந்து அதன் தொலைவுப் படத்தை பூமிக்கு அனுப்பியது.
- 1963 - கியூபாவை சூறாவளி தாக்கியதில் 7,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1965 - ஐக்கிய அமெரிக்காவுக்கு சென்ற முதலாவது பொப்பாண்டவர் பாப்பரசர் ஆறாம் போல் நியூயோர்க் வந்தடைந்தார்.
- 1992 - மொசாம்பிக்கின் 16 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1992 - ஆம்ஸ்டர்டாம் நகரில் குடியிருப்புகள் மீது விமானம் ஒன்று மோதியதில் தரையில் இருந்த 39 பேர் உட்பட 43 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றில் இரண்டாவது மிகப் பெரிய வங்கிக்கொள்ளை வட கரோலைனாவில் இடம்பெற்றது. 17.3 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இவற்றில் 95 வீதம் பணம் திரும்பப்பெறப்பட்டது.

### பிறப்புகள்

- 1542 ராபர்ட் பெல்லார்மின், இத்தாலியப் புனிதர் (இ. 1621)
- 1884 சுப்பிரமணிய சிவா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், எழுத்தாளர் (இ. 1925)
- 1904 திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (இ. 1932)
- 1911 ஏ. எம். ஏ. அசீஸ், இலங்கை கல்வியாளர், அரசியல்வாதி
- 1916 வித்தாலி கீன்ஸ்புர்க், நோபல் பரிசு பெற்ற உருசிய இயற்பியலாளர் (இ. 2009)
- 1923 சார்ள்டன் ஹெஸ்டன், அமெரிக்க நடிகர் (இ.2008)
- 1926 அப்துல் சமது, இந்திய அரசியல்வாதி (இ. 1999)
- 1936 கிறிஸ்தோபர் அலெக்சாண்டர், கட்டடக் கலைஞர்
- 1938 குர்த் வியூத்ரிச், நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்து வேதியியலாளர்
- 1942 ரி. ராஜகோபால் இலங்கையின் மேடை, வானொலி நடிகர்
- 1989 டகோட்டா ஜோன்சன், அமெரிக்க நடிகை

### இறப்புகள்

- 1582 அவிலாவின் புனித தெரேசா, எசுப்பானியப் புனிதர்
- 1669 ரெம்பிரான்ட், டச்சு ஓவியர் (பி. 1606)
- 1890 காதரின் பூத், இரட்சணிய சேனையைட் தோற்றுவித்த ஆங்கிலேயர் (பி. 1829)
- 1904 கார்ல் பேயர், ஆத்திரிய வேதியியலாளர் (பி. 1847)
- 1947 மேக்ஸ் பிளாங்க், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி.1858)
- 1972 சேனரத் பரணவிதான, இலங்கை தொல்லியலாளர், கல்வெட்டியலாளர் (பி. 1896)
- 1982 கோபால் சுவரூப் பதக், இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர்
- 1992 எர்பர்ட் தம்பையா, இலங்கை நீதிபதி (பி.1926)
- 2009 பசவ பிரேமானந்த், கேரளப் பகுத்தறிவாளர் (பி. 1930)
- 2011 ஜோன் மெக்கார்த்தி, அமெரிக்க கணினி அறிவியலாளர், உணரறிவியல் அறிஞர் (பி. 1927)

சிறப்பு நாள்

- உலக விலங்கு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 | 60-90 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 55 | 70 | 100 | 100 |
| தக்காளி | 100 | 100 | 70 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 60 | 70 |
| கோவா | 80 | 100 | 45 | 80 | 80 | 80 |
| கரட் | 50 | 100 | 60 | 100 | 120 | 80 |
| பூசணி | 30 | 20 | 20 | 40 | 50 | 30 |
| புடோல் | 60 | 60 | 35 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 50 | 40 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 70 | 120 | 100 | 100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 65 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 100 | 100 | 180 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 200 | 100 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 95 | 160 | 80 | 120 |
| பீற்றூட் | 50 | 30 | 40 | 40 | 120 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 120 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 100 | 200 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 140 | 160 | 50 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 30 | 60 | 40 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 30 | 400 | 30 |
| தேசிக்காய் | 400 | 500 | 350 | 400-600 | 25-35 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-35 | 40 | — | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | 200 | 180 |
| வெங்காயப்பூ | 80 | — | — | 160 | 80 | 180 |
| முள்ளங்கி | 80 | 60 | 30 | 60 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | — | 60 | — | — | 80 | — |

# சர்வதேச பாடசாலைகளை ஒழுங்கமைக்கத் திட்டம்

## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

உள்நாட்டில் இயங்கி வருகின்ற அனைத்து சர்வதேச பாடசாலைகளையும் ஒழுங்கமைப்பதற்கான திட்டமொன்றை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் அகிலவிராஜ் தெரிவித்தார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டி வீதியிலுள்ள பாதுகாப்பு பாடசாலையின் பத்தாவது வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்வியமைச்சு தொடர்ந்து தேர்ச்சியான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. ஆசியாவிலேயே நமது நாட்டின் கல்வித்துறை மிகவும் பலம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. அதற்காக நாம் வரலாற்று காலம் தொட்டு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளோம். நமது ஆசிரியர் வளம், பாடசாலை அபிவிருத்தி போன்றன ஏனைய நாடுகளுக்கு உதாரணமாக உள்ளன. இருந்தபோதிலும் நவீன தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ற வகையில் பாடசாலைக் கல்வியை தயார்படுத்த வேண்டும்.

அதற்கென ஆசிரியர்கள் விசேடமாக பயிற்றுவிக்கப்படுவர். நம் நாட்டின் பாதுகாப்புப் படையினர் மிகவும் பலம் வாய்ந்தவர்கள். எனவே பாதுகாப்புப் படை பாடசாலைகளையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல வேண்டும். அதற்கென விசேட நிதியுதவிகள் வழங்கி வருகின்றோம்.

பாடசாலைகளை சர்வதேச தரத்தில் அபிவிருத்தி அடையச் செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்தோடு நாட்டிலுள்ள அனைத்து சர் வதேச பாடசாலைகளையும் முறையாக ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தவுள்ளோம். சர்வதேச பாடசாலைகளில் உள்ள வளங்களைப்போன்றே அனைத்து வளங்களையும் தேசிய பாடசாலைகளுக்கும் வழங்க தீர்மானித்துள்ளோம்.

அத்தோடு நாளை மறுதினம் 6ஆம் திகதி சர்வதேச ஆசி ரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இத்தினத்திலாவது நாம் ஆசிரியர்களை நினைவுபடுத்த வேண்டும். இதற்கென தொலைபேசி ஊடாகவேனும் ஆசிரியர்களை வாழ்த்த வேண்டும். சர்வ தேச ஆசிரியர் தினத்தில் வாழ்த்துரைப்பது மிகவும் அவசியமானது. கல்விக் கண்ணை திறந்த ஆசிரியர், தாய் தந்தையருக்கு பரிசுப் பொருட்கள் வழங்காவிட்டாலும் பரவாயில்லை. தொலைபேசி அழைப்பின் ஊடாகவேனும் அனைத்து மக்களும் ஆசிரிய பெருந்தகைகளை வாழ்த்த வேண்டும். தற்பொழுது எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் சிறந்த நிலையில் இருந்தாலும் ஆசிரியர்கள் வழங்கிய ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களைமறந்துவிடக் கூடாது.



தற்போது ஓய்வு பெற்றுக்கொண்டுள்ள ஆசிரியர்களின் தொலைபேசி இலக்கங்களை கண்டறிந்து அவர்களுக்கு தொலைபேசி ஊடாகவேனும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் ஆசிரியர்களை மதித்தால் மட்டுமே உயர முடியும் என்பதை நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நியூசிலாந்தில் சம்பந்தனை புகழ்ந்து பேசிய பிரதமர்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமாகிய இரா. சம்பந்தனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புகழ்ந்து பேசியுள்ளார்.

நான்கு நாள் விஜயமாக நியூசிலாந்துக்குச் சென்றுள்ள பிரதமர் நேற்று முன்தினம் மாலை ஒக்லண்டில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளை, சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு மெட் அல்பிரட் யுத்த ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. நியூசிலாந்து எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்டவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பிரதமர், தேசிய அரசாங்கமானது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நிறுவப்பட்டமைக்காக மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் நாட்டு மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய பல அரசியல் கட்சிகள் உள்ளமையினால் தேசிய அரசாங்கத்தை கொண்டு நடத்துவதில் இலகுவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இலங்கையில் கூட்டு எதிர்க்கட்சி ஒன்று இருப்பதாகவும் இவர் இந்த சந்திப்பின் போது தெரிவித்தார்.

அத்துடன், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனை இந்த சந்திப்பின் போது பிரதமர் புகழ்ந்து பேசியுள்ளார். இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன் தனக்கு முன்னதாகவே பாராளுமன்றத்துக்கு வந்து விட்டார்.

அதாவது, 1977ஆம்ஆண்டு காலப்பகுதியிலேயே அவர் பாராளுமன்றத்துக்கு வந்து விட்டார். அவர் மிகவும் நேர்மையான மனிதர்.

நியாயமான செயற்பாடுகளுக்காக எந்தநேரமும் ஒத்துழைப்பு நல்குவார். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முன்மாதியாக திகழ்கின்றார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவரை புகழ்ந்து பேசியுள்ளார். (இ-7)

# ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் 700 பேர் பங்கேற்கவுள்ளனர்


எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவுள்ள சர்வதேச ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் 700 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டை நடத்த அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு ஊழல் எதிர்ப்பு உச்சி மாநாட்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 861

தர்சி



அனு அனுஜன்




சிவகுமார்





குட்டி மணி



சங்கர்




லிங்கா ரூபன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## "அண்ணாவின் முதல் படம் வேலைக்காரி" 266

பேரறிஞர் அண்ணா கதை, வசனம் எழுதிய முதற்படம் வேலைக்காரி. அதில் கதாநாயகனாக நடித்துப் பெரும் புகழ் பெற்றவர் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி.

இவர் எம்.ஜி.ஆரை விட 3 வயது மூத்தவர். 1914 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்தார். பெற்றோர்: ராமபத்ர செட்டியார்-குப்பம்மாள்.

நாடக வாழ்க்கை

சிறு வயதிலேயே படிப்பை விட நடிப்பே அவரை அதிகம் கவர்ந்தது. 7 வயதில் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்தார். அங்கு 6 ஆண்டுகள் நடித்தார். பின்னர் அங்கிருந்து விலகி டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவில் சேர்ந்தார்.

டி.கே.எஸ் சகோதரர்களின் குமாஸ்தாவின் பெண் என்ற நாடகம் 1935 இல் திரைப்படமாகியது. அதில் கே.ஆர். ராமசாமி சிறு வேடத்தில் நடித்தார். அவருடைய முதல் படம் இதுதான்.

பூம்பாவை

குமாஸ்தாவின் பெண் படத்தின் துணை இயக்குநர்களாகவும் எடிட்டர்களாகவும் இருந்த கிருஷ்ணன், பஞ்சு இரட்டையர்கள் பூம்பாவை என்ற படத்தை டைரக்ட் செய்தனர். அவர்களுடைய சிபாரிசின் பேரில் இந்தப் படத்தின் கதாநாயகன் வேடம் கே.ஆர். ராமசாமிக்கு கிடைத்தது. கதாநாயகியாக நடித்தவர் யூ.ஆர்.ஜீவரத்னம். படம் வெற்றி பெற்றது.

தொடர்ந்து தெய்வநீதி, கிருஷ்ணபக்தி, கங்கணம் ஆகிய படங்களில் நடித்தார். கிருஷ்ணன் நாடக சபா என்ற பெயரில் சொந்தத்தில் நாடக குழுவைத் தொடங்கினார். (கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் மீது பேரன்பு கொண்டவர் கே.ஆர்.ராமசாமி. அதனால் தன் நாடக குழுவுக்கு அவர் பெயரை வைத்தார்).

திராவிட இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் கே.ஆர்.ராமசாமி. அதனால் அண்ணாவிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார். கே.ஆர்.ராமசாமி நடிப்பதற்காகவே வேலைக்காரி, ஓர் இரவு ஆகிய நாடகங்களை எழுதிக் கொடுத்தார் அண்ணா.

இந்த இரண்டு நாடகங்களும் பெரிய வெற்றி பெற்றன. புராணப் படங்களில் நடிக்க வந்த அழைப்புகளை தி.மு.க. கொள்கையின் காரணமாக கே.ஆர்.ராமசாமி ஏற்க மறுத்து விட்டார்.



சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு என்று வாதாடுகிறார், கே.ஆர்.ராமசாமி. படம்: "வேலைக்காரி".

திரைப்படமாகிய வேலைக்காரி

நாடகமாக வெற்றி பெற்ற வேலைக்காரியை, ஜூபிடர் பிக்சர்சார் படமாகத் தயாரிக்க முடிவு செய்தனர். திரைக்கதை வசனத்தை அண்ணா எழுதினார். படத்தை ஏ.எஸ். ஏ.சாமி டைரக்ட் செய்தார்.

படத்தின் கதாநாயகன் கே.ஆர்.ராமசாமி. கதாநாயகி வி.என்.ஜானகி.


மற்றும் டி. எஸ். பாலையா, எம்.வி.ராஜம்மா, எம்.என். நம்பியார், டி.பாலசுப்பிரமணியம், பி.கே.சரஸ்வதி ஆகியோர் நடித்தனர்.

25.02.1949இல் வெளியான வேலைக்காரி பெரிய வெற்றி பெற்றது. கே.ஆர்.ராமசாமியின் நடிப்பும் பாடல்களும் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றன. குறிப்பாக கோட்டில் வக்கிலாக ஆஜராகி சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கிலின் வாதம் ஒரு விளக்கு என்று வாதாடும் காட்சியில் கைதட்டல் பெற்றார்.

பட்சிராஜா ஸ்டூடியோ தயாரித்த காஞ்சனாவில் (எழுத்தாளர் லட்சுமியின் நாவல்) கதாநாயகனாக நடித்தார். அவருடைய மனைவியாக லலிதாவும் காதலியாக பத்மினியும் நடித்தனர்.

(தொடரும்)

# நீர்த்தேக்கத்தில் பேருந்து கவிழ்ந்து 10 பேர் மரணம்



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் அணையின் நீர்த்தேக்க பகுதியில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய பிரதேசம் மாநிலம் போபாலில் இருந்து லடேரிக்கு 32 பேரை ஏற்றிக் கொண்டு பேருந்து ஒன்று சென்றுக் கொண்டிருந்தது.

பேருந்து நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணியளவில் பாலிகிராமம் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது சஞ்சய் சாகர் அணையினால் நீர் தேங்கி நிற்கும் பகுதியை கடப்பதற்காக கட்டப்பட்டுள்ள பாலம் வழியாக பேருந்து சென்று கொண்டிருந்தன.

அப்போது பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நீர்த்தேக்கத்திற்குள் விழுந்தது. இதில் பேருந்தில் சென்ற 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 17 பேர் காயம் அடைந்துள்ளனர். (இ-7)

# கொள்ளையில் ஈடுபட முனைந்த வங்கி முகாமையாளர் கைது

வென்னப்புவ, தோப்புவ சந்தியில் அமைந்துள்ள அரச வங்கியொன்றில் கொள்ளையிடத் திட்டமிட்ட குறித்த வங்கியின் முகாமையாளர் உள்ளிட்ட ஐவர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி குறித்த வங்கியில் மேற்கொள்ளப்படவிருந்த கொள்ளை முயற்சியானது பொலிஸாரினால் தடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வென்னப்புவ பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து இந்த வங்கியின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரிய கடன் பிரச்சினையில் சிக்கியுள்ள குறித்த வங்கியின் முகாமையாளர், தன்னுடைய கடனிலிருந்து விடுபடுவதற்காக இந்த கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# திருமணமாகாத பெண்ணுக்கு பிறக்கும் குழந்தையின் பிறப்பினை பதிவு செய்யும் புதிய நடைமுறை இலங்கையில் அறிமுகம்

இலங்கைப் பதிவாளர் நாயகத் திணைக்களம் திருமணமாகாத பெண்ணுக்கு பிறக்கும் குழந்தையின் பிறப்பினைப் பதிவு செய்யும் புதிய நடைமுறையினை அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இலங்கையில் சிறுவர்களின் எதிர்காலத்தினை பாதுகாக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளினை பாதுகாப்போம்' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் பொருட்டு பெற்றோர் திருமணம் புரியாத சந்தர்ப்பத்தில் பிள்ளையின் பிறப்பினை பதிவு செய்யும் போது தந்தையின் பெயர் 'தெரியாது' என்பதற்குப் பதிலாக தாய் மற்றும் தகப்பன் இருவரினதும் விருப்பத்தின் பேரில் தகப்பனின் பெயரினை பிறப்புச்சான்றிதழில் உட்புகுத்துவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 07/2016 ஆம் இலக்க சுற்று நிருபம் சுட்டிக் காட்டுகின்றது.

மேலும் பிறப்பு, இறப்புச் சட்டத்தின் 21 ஆவது பிரிவினால் சட்டரீதியாக திருமணமாகாத ஜோடிகளுக்குப் பிறக்கும் பிள்ளையினது பிறப்பினை தகப்பனின் தகவல்களினை உட்புகுத்தி பதிவு செய்வதற்காக ஏற்பாடுகள் உள்ளன. பிள்ளையின் பிறப்பினை பதிவு செய்வதற்காக பெற்றோரின் விவாகச் சான்றிதழினை கட்டாயமான சான்றாகக் காட்டுவதனால் இவ்வாறான பிள்ளைகளின் பிறப்பினை பதிவு செய்வதனை தவிர்ப்பதற்கு அல்லது தந்தையின் தகவல்கள் இன்றி பதிவு செய்வதற்கு இடமுள்ளது.

ஆசையினால் திருமணமாகாத பெண்ணுக்குப் பிறக்கும் பிள்ளைகளின் பிறப்பினை பதிவு செய்வதற்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாயுடன் தகப்பனையும் அழைப்பதற்கு அனைத்துவித முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

பெற்றோர் இருவரும் இதற்காக தோற்றுவதன் காரணமாக பிள்ளையின் பிறப்புச் சான்றிதழுக்கு தகப்பனின் தகவல்களினை உட்புகுத்திப் பதிவு செய்வதற்கு இயலும் என கட்டாயமாக பெற்றோருக்கு அறிவுறுத்த வேண்டும். அதற்கிணங்க பிறப்புச் சான்றிதழில் 10 ஆவது நிரலில் தாய் மற்றும் தந்தையின் ஒப்பத்தினைப் பெறுவதோடு பிறப்புச் சான்றிதழின் 4 ஆவது நிரலில் தகப்பனின் தகவல்களை உட்புகுத்தி, 6 ஆவது நிரலில் இல்லை என குறிப்பிட்டு, 7 ஆவது நிரலில் தாய்வழி பாட்டனின் தகவல்களினை குறிப்பிட்டு, 8 ஆவது நிரலில் 'தாய் இலங்கையில் பிறந்தவர்' என அல்லது பொருத்தமான விதத்தில் தாய் வழிப் பூட்டனின் தகவல்களைக் குறிப்பிட்டு 9 ஆவது நிரலில் பெற்றோர் இருவரினதும் பெயரினைக் குறிப்பிட்டு திருமணமாகாத தாய்க்குப் பிறக்கும் குழந்தையின் பிறப்பினைப் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கும் அனைத்து பிறப்பு, இறப்பு மற்றும் வைத்திய பதிவாளர்களுக்கும் பதிவாளர் நாயகம் , ஈ.எம். குணசேகர 07/2016 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் குறிப்பிட்டு அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# படகு இயந்திரம் திருட்டு

வடமராட்சி சக்கோட்டைப் பகுதியில் உள்ள வீட்டு வளை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த படகு வெளியிணைப்பு இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சக்கோட்டை அல்வாய் வட மேற்கைச் சேர்ந்த தீபன் என்பவரே இம் முறைப்பாட்டினை செய்துள்ளார்.

கடற்றொழில் செய்துவிட்டு வெளியிணைப்பு இயந்திரத்தினை வைத்ததாகவும் அது கடந்த சனிக்கிழமை இரவு திருடப்பட்டதாகவும் மறுநாள் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இது தொடர்பில் பருத்தித்துறைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-60)

# மந்திகை ஆதார வைத்தியசாலை சிற்றாலயத்தின் 21ம் ஆண்டு நிறைவு

(கரணவாய்)

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையின் மந்திகை ஆதார வைத்தியசாலை சிற்றாலயத்தின் 21 ஆம் ஆண்டு நிறைவும் நன்றி செலுத்தும் வழிபாடும் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சிற்றாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அருளுரையினை குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை குரு வி. டேவிற் நிருசிகன் நிகழ்த்தவுள்ளார். (இ-60)



பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன. கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த 30 ஆம் திகதி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற வைபவத்திலேயே இப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன. கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் சனசமூக நிலையம் ஒன்றிற்கு மரத் தளபாடங்கள், கரவெட்டி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றிற்கு தட்டச்சுப் பொறி இயந்திரம் என்பன வழங்கப்பட்டன. (படம்:- கரணவாய் செய்தியாளர்)

# சம்பள உயர்வுகோரி நேற்றும் போராட்டம்




சம்பள உயர்வுகோரி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஒரு வார காலமாக பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், அதன் ஒரு கட்டமாக நேற்று திங்கட்கிழமை ஊவா மாகாணத்தின் அப்புத்தளை நகரில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காகொல்ல, பங்கெட்டி, கோனமுட்டா, பிட்டரத்த மலை, தம்பேத்தனை, தங்க மலை போன்ற மலையக பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் அப்புத்தளை நகரில் நேற்றுக் காலை முதல் குவிந்து கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதனால் பதுளை- கொழும்பு பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் நகரில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஒருவார காலமாக இவ்வாறு போராட்டங்களை நடத்தி வருகின்ற போதும், முதலாளிமார் சம்மேளனம் இதுகுறித்து எவ்வித அறிவிப்பையும் வெளியிடாமல் உள்ளதால் மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.(இ-7)

# மகிந்த தலைமையிலான புதிய கட்சி மிகவும் சிறப்பானதாக அமையுமாம்

## மகிந்தவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாஸ கூறுகிறார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் சக்தி மிகவும் சிறப்பானதாக அமையும் என சோதிடர் சுமணதாஸ அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடராக செயற்பட்ட சுமணதாஸ அபேகுணவர்தனவின் ஆலோசனையால். மகிந்த ஜனாதிபதி பதவியை இழந்திருந்தார். இந்நிலையில் மீண்டும் மகிந்த தொடர்பில் சோதிட ஆரூடத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி எதிர்வரும் காலங்களில் உருவாக்கவுள்ள புதிய கட்சி சிறப்பான ஒரு நடவடிக்கையாக காணப்படும்.ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த தான் கூறியதனை மாத்திரம் மனதிற்கு எடுத்துக் கொள்ளவில்லை. இந்திய சோதிடர்களின் ஆலோசனைக்கமையவும் செயற்பட்டமையினாலே ஆட்சியை இழந்தார்.

அந்த தேர்தலின் பின்னர் மகிந்த தன்னுடனான உறவை கைவிட்டுள்ளார். எனினும் நான் மீண்டும் மகிந்தவுக்கு சேவை செய்ய ஆயத்தமாக உள்ளேன்.



இந்த நேரத்தில் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக சக்தி ஒன்று கட்டியெழுப்பப்படுகின்றதனை கிரக நிலைமைக்கமைய காண முடிகின்றது.வியாழன் கிரகம் கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி கன்னி ராசிக்கு வந்துள்ளது. அத்துடன் இலங்கை கும்ப ராசிக்கு எதிர்க் கட்சியாக குறித்து கூறும் ரிஷப ராசிக்கு அதிபதியான வெள்ளி கிரகம் துலா ராசியில் வலுவாக உள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் பிறப்பு கிரக நிலைமைக்கு மிகவும் ஒத்த நிலையில் கிரக நிலையில் உள்ளது. 2015ஆம் ஆண்டும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ என்னிடம் அல்ல இந்திய சோதிடர்களிடம் சோதிட ஆலோசனை பெற்றுக் கொண்டமையினாலே நடவடிக்கைகள் அனைத்தும் குழப்பமடைந்தன.நான் வழங்கிய சோதிட ஆலோசனைக்கு அமையவே மூன்று தசாப்தமாக நிலவிய போரை முடிவுக்கு கொண்ட வர முடிந்தது.

எனது வாழ்நாளின் அரைவாசிஅவருடன் தான் செயற்பட்டுள்ளேன். எந்த ஒரு ஆலோசனையும்மீண்டும்வழங்குவதற்கு நான் மகிழ்சியுடன் எதிர்பார்த்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தேக நபர்கள் பெறும் சட்ட உதவியை மறுப்பதற்கான புதிய சட்டம் சமர்ப்பிப்பு

கைது செய்யப்படும் சந்தேகநபர்களுக்கு சட்டத்தரணிகளின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை இல்லாதொழிப்பதற்கான சட்ட மூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாரினால் கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் பொலிஸாருக்கு வாக்குமூலம் ஒன்றை வழங்க முன்னர் தமது சட்டத்தரணி ஒருவருடன் கலந்தாலோசித்துக் கொள்வதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகள் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்தது.

இதன் மூலம் கைது செய்யப்படும் சந்தேகநபர்களை குற்றவாளியாக சித்திரிக்கும் நிலைப்பாடு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் பொலிஸார் தமது அதிகாரத்தை பயன்படுத்தி சந்தேகநபர்களை கைது செய்து, அவர்களை குற்றவாளிகளாக்கி தண்டனை வாங்கிக் கொடுத்த சந்தர்ப்பங்கள் ஏராளமாக நடைபெற்றுள்ளன.

எனினும் வாக்குமூலம் ஒன்றை வழங்க முன்னர் சட்டத்தரணியொருவருடன் கலந்துரையாடும் வாய்ப்பு கைது செய்யப்படுகின்றவர்களுக்கு பெரும் பாதுகாப்பாக இருந்தது.

தற்போது நல்லாட்சி அரசாங்கத்தில் குறித்த சலுகையை நீக்கும் வகையிலான சட்டத்திருத்தம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் பொலிஸார் அனுமதித்தால் மாத்திரமே சட்டத்தரணிகளை சந்திக்கும் வாய்ப்பு கிடைப்பதன் காரணமாக பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறல் நடைபெறுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ-7)

# எயார்பஸ் விமான இறக்குமதிக்கு பொருளாதாரத் திட்டமே காரணம்

## நிதியமைச்சர் ரவி கடும் விசனம்

கடந்த ஆட்சிக் காலத்தின் தூரநோக்கற்ற பொருளாதாரத் திட்டத்தின் விளைவாக எயார் பஸ் ரக விமானங்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கா தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு பேருந்துகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் கடந்த அரசாங்கம் இவ்வாறு நடந்து கொண்டதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

அதிக விலை மிக்க எயார்பஸ் ரக விமானங்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் நாடு பாரிய பொருளாதார பாதிப்புக்கு முகம்கொடுத்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு செலவிடப்படும் பணத்தைக்கொண்டு பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களையும், விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் மாத்திரமல்லாமல் முழு கல்வி செயற்பாட்டையும் மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாம் தற்போது 2017 ஆம் ஆண்டிக்கான வரவு- செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கல்விக்கு நிதியொதுக்கீட்டை மேற்கொள்ளும் போது நாம் முகம்கொடுத்த பெரிய பிரச்சினை தான் கடந்த ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தேவையற்ற செலவுகளை ஈடு செய்யும் விதம் தொடர்பானதாகும்.

குறிப்பாக ஸ்ரீலங்கன் எயார் நிறுவனம் மேற்கொண்ட ஒழுங்கு முறையற்ற கொள்வனவுகளின் விளைவுகளை நாம் அனுபவித்து வருகின்றோம்.

ஸ்ரீலங்கன் எயார் நிறுவனத்தினால் கொள்வனவு செய்ய ஓடர் கொடுக்கப்பட்ட ஏ-350 ரக எயார்பஸ் ரக விமானங்கள் விரைவில் இலங்கைக்குக் கிடைக்கப் பெறவிருக்கின்றன. இவ் விமானங்கள் அதிக விலைக்கே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதன் நிமித்தம் நாம் மாதாந்தம் சுமார் 1400 மில்லியன் அமெரிக்க டொலர்களை தவணைக் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் நாம் உண்மையில் செலுத்த வேண்டிய தொகை 950 மில்லியன் ரூபா தான்.

இந்த விமானங்கள் உண்மையான பெறுமதியை விடவும் 25 வீதம் அதிக விலைக்கே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பிழையான டென்டர் விதிமுறையைப் பின்பற்றியதன் காரணமாக அதிக பணத்தைச் செலவிட நேர்ந்துள்ளது.

இது மாத்திரமல்லாமல் இந்த ரக விமானம் ஒரே முறையில் சுமார் 17 மணித்தியாலங்கள் தொடராகப் பறக்கக் கூடியது.

நாம் இலங்கையில் இருந்து கொண்டு எந்த நாட்டுக்குப் பறப்பதற்கு இவ்வாறான விமானங்கள்எமக்குத்தேவை எனக் கேட்கின்றேன். அவ்வாறான பயணப் பாதை எமக்குள்ளதா? அதனால் இதனை எம்மால்தொடர்ந்தும்கொண்டு நடத்த முடியாது என்று நாம் தீர்மானித்துள்ளோம்.

இதனை விடுத்து நாம் அதனை பெற்றால் மாதமொன்றுக்கு 890 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டமாக செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். அதனால் நட்டத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக குறித்த கம்பனியிடம் இந்த விமானத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளோம். அதன் நிமித்தம் நாம் சுமார் 1960 கோடி செலவை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை எமது கல்வித் துறைக்கு பயன்படுத்தியிருக்கலாம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து இருக்கலாம். பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வு கூடங்களை அமைத்துக் கொடுத்திருக்கலாம். இவற்றுக்கு இப்பணத்தைச் செலவிட்டிருக்கலாம். இப்பணத்தைக் கொண்டு ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் வீடுகளை அமைத்துக் கொடுத்திருக்கலாம்.

கடந்த கால ஆட்சியாளர்கள் இவை தொடர்பில் எவ்வித வெளிப்படைத் தன்மையுடனும் செயற்படாமல் எழுந்தமானதாக செயற்பட்டதன் விளைவுகளே இவை. அவர்கள் அவ்வாறு செயற்பட்ட போதிலும் அதன் விளைவுகளை நாம் அனுபவிக்க நேர்ந்துள்ளது. அதனால் இங்கு இடம்பெற்றுள்ள மோசடிகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டியது ஊடகங்களின் பொறுப்பு என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையைக் கட்டியெழுப்ப அரசியல் நீதி மட்டும் போதாது

30 ஆண்டுகளாக இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது அரசியல்சார் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தியே இடம்பெற்றது. பெரும்பான்மை சிங்கள மக்களால் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக ரீதியான புறக்கணிப்புக்களே அரசியற் பிரச்சினைக்கான மூலகாரணமாக அமைந்தது.

1950களின் மத்தியில் சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரேயொரு உத்தியோக பூர்வ மொழி எனப் பிரகடனம் செய்யப்பட்டமையே இவ்வாறான ஒரு அரசியல் சார் முரண்பாட்டிற்கான பொறியாக அமைந்திருக்கலாம். ஆனால் பல பத்தாண்டுகளாக நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் அனைத்து விடயங்களிலும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் திட்டமிடப்பட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டமையே இவ்வாறான ஒரு யுத்தம் தோன்றுவதற்கான காரணமாகும்.

இவ்வாறான திட்டமிடப்பட்ட புறக்கணிப்புக்கள் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யவில்லை என்பதால் இவர்கள் தனிநாடு கோரி யுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர்.

2009இல் யுத்தம் முடிவடைந்த போது, யுத்தம் மட்டுமே நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் ஆனால் இலங்கையில் நிலவி வரும் சமூக முரண்பாடானது இன்னமும் முடிவுக்கு வரவில்லை எனவும் பல விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர். யுத்தம் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும் இன்னமும் சமூக முரண்பாடுகள் தீர்க்கப்படாத நிலை காணப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தைக் குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. இது நாட்டின் அரசியல் ரீதியாக மட்டுமல்லாது பொருளாதார ரீதியாகவும் முதன்மை பெறுகிறது. இலங்கை அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட மொழிசார் கோட்பாடானது கடந்த பல ஆண்டுகளாக பொருளாதார மற்றும் அரசியல் பாரபட்சங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இலங்கையைப்போன்று நீண்டகால யுத்தத்தை முகங்கொடுத்த எந்தவொரு நாடும் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதுடன் எதிர்காலத்தில் ஏற்படவல்ல முரண்பாட்டைத் தடுப்பதற்கும் இது அவசியமானதாகும். நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டியதும் மிகவும் முக்கிய விடயமாகும்.

சமத்துவமின்மையே பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணமாக உள்ள போதிலும் இந்த விடயம் இன்னமும் உணரப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. எந்தவொரு சமூகத்தைச் சேர்ந்த பெண்களும் அந்த நாட்டின் உயிர்த்துடிப்பான பொருளாதாரத்திற்கு பங்காற்றுகிறார்கள். அத்துடன் போருக்குப் பின்னான அபிவிருத்திகளிலும் இவர்கள் மிக முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர். இலங்கையைப் பொறுத்தளவில், பால்நிலைச் சமத்துவம் என்பது நிலையான, அமைதிமிக்க, சமத்துவமான எதிர்காலத்திற்கு அடிப்படையாக அமையும்.

வடக்கில் நிலவும் தொழில்சார் நிபந்தனைகள், வாய்ப்புக்கள் மற்றும் சமத்துவமின்மைகள் தொடர்பான ஓர் பார்வை என்கின்ற தலைப்பின் கீழ் Solidarity Center என்கின்ற நிறுவனமானது அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு மட்டுமல்லாது, சிறப்புடன் செயற்படும் தொழில்சார் உறவுநிலைக்கும் சமத்துவமான அபிவிருத்திக்கும் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துவதிலும் சவாலைச் சந்திக்க வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் தொழிலாளர்களில் 81 சதவீதமானவர்கள் தமக்கான தொழில் நிபந்தனைகள் தொடர்பாக எழுத்துவடிவில் எழுதப்பட்ட ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் கூட்டுப் பேரம் பேசலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் கொண்டிருக்கவில்லை. 85 சதவீதமான யுாழ்ப்பாணத் தொழிலாளர்கள் சட்ட ரீதியாக ஆகக்குறைந்த வேதனம் தொடர்பான விழிப்புணர்வற்றவர்களாக உள்ளனர். அதாவது யாழ்ப்பாணத்தில் தற்போதைய ஆகக்குறைந்த வேதனம் மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவாகும்.

இந்தப் பகுதியில் பரந்தளவில் இடம்பெறும் வேதனப் பாரபட்சங்கள் பெண்களுக்கு பிரதிகூலமாக அமைந்துள்ளன என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. இப்பகுதியைச் சேர்ந்த பெண் தொழிலாளர்கள் வேலைத்தளங்களில் பால்சமத்துவமின்மைக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை இந்த ஆய்வின் பெறுபேறுகள் சுட்டிநிற்கின்றன. அதாவது இவர்களுக்கான தொழில் நிபந்தனைகள் மோசமானதாகவும், சட்டரீதியான உரிமைகள் பலவீனமானதாகவும் அனைத்துலக தொழிலாளர் நியமத்திற்கு அமைவாகவும் காணப்படவில்லை.

இலங்கையில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனமான மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான மையத்தில் பணியாற்றும் நிசா தெல்லிப்பழையில் அண்மையில் மேற்கொண்ட ஓர் ஆய்வில் பங்குபற்றிய பெண்ணொருவர் தனது நேர்காணலின் போது பின்வரும் கருத்தொன்றைப் பகிர்ந்து கொண்டிருந்தார்.

அதாவது 'தொழில் வாய்ப்பிற்கான விளம்பரம் ஒன்றில் பெண்கள் தேவை எனக்கோரப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணிகள் பெண்களுக்குப் பொருத்தமற்றதாக இருந்தன. இது தொடர்பாக தொழில்கொள்வோரிடம் வினவியபோது ஆண்களுக்குக் கொடுக்கும் வேதனத்தை விடப் பெண்களுக்குக் குறைவான வேதனத்தை வழங்க முடியும் என்பதாலேயே ஆண்கள் செய்ய வேண்டிய இந்தப் பணிக்கு பெண் தொழிலாளர்கள் கோரப்பட்டுள்ளனர் எனக் கூறினார்' இந்த ஆய்வின் பிரகாரம் 81 சதவீதமான தொழிலாளர்கள் வாரத்தில் ஐந்து நாட்களுக்கும் மேல் பணியாற்றுவதாகவும், இது தொழிலாளர் உரிமை தொடர்பான தேசிய சட்டத்தை மீறுவதாகவும், மேலதிக நேரத்தில் பணியாற்றும் தொழிலாளர்களில் பெண்களே அதிகமானவர்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல் போன்றன சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படும் மிகச் சொற்பமான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கை ஒன்றாகும். அதாவது இலங்கையில் ஊழியர் சேமலாபநிதி மற்றும் பணியாளர் நம்பிக்கை நிதியம் ஆகிய இரண்டு நிதியங்கள் மூலம் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களது முதலாளிகள் இவ்விரு நிதியங்களுக்குமான நிதியை வழங்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் நிலவும் இவ்வாறான தொழில்சார் சூழலானது தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அதன்மூலம் தமது எதிர்காலத்தை நிலை பெறச் செய்ய முடியும் என நம்பும் தொழிலாளர்கள் மத்தியில் ஆபத்தான நிலைமையைத் தோற்றுவிக்கின்றது.

இதன் மூலம் இலங்கையில் எழுத்து மூலம் வரையப்பட்டுள்ள தொழிலாளர் உரிமை பேண் சட்டமானது நாட்டின் ஏனைய பகுதிகளை விட வடக்கில் வாழும் மக்களுக்கு பாரபட்சத்தை ஏற்படுத்துகின்றது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

தொழிலாளர் உரிமை பேண் சட்டத்தை அமுல்படுத்துவதில் நாடு முழுவதிலும் பிரச்சினை காணப்படும் அதேவேளையில், வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே ஏனைய இடங்களில் உள்ள தொழிலாளர் சங்கங்கள் தமது தொழிலாளர்களின் உரிமைக்காக நீதிமன்றம் வரை சென்று சட்டத்தை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் இதற்கான பரிகாரத்தையும் வழங்குகின்றன.

ஆனால் தபால் சேவை, தொலைத் தொடர்பாடல் சேவை மற்றும் சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கான தொழிற் சங்கங்கள் இலங்கை முழுவதிலும் செயற்படுகின்ற போதிலும் வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான சங்கங்கள் தொழிற்படவில்லை. பொதுத்துறைக்கான சமமற்ற நிதி வழங்கலால் மக்களுக்கான சேவைகள் வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்ளப்படவில்லை என தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த ஆய்வு அறிக்கையானது பின்வரும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

முதலாவதாக, அரசாங்கம் மற்றும் வர்த்தக சமூகமானது தேசிய மற்றும் அனைத்துலக தொழில் நியமங்களுக்கு ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய பணியை தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அனைத்துலக அபிவிருத்தி பங்குதாரர்கள் ஆகியோர் முன்னெடுக்க முடியும். தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை தொழிலாளர்கள் மத்தியில் மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, போரின் போது சிதைவுற்ற தொழிற்சங்கங்கள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான ஆதரவை வழங்குவதன் மூலம் தொழிலாளர்கள், தொழில் கொள்வோர் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையில் வினைத்திறன் மிக்க கலந்துரையாடல்கள் மேற்கொள்ள வழி வகுக்கப்படும்.

மூன்றாவதாக, இலங்கை அரசாங்கமானது அனைத்துலக தொழிலாளர் நிறுவனத்தின் வரையறைகளை ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும். வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, வளங்களைப் பகிர்ந்து கொள்ளல், அடிப்படை குறைந்தபட்ச வாழ்வாதார நியமங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான தொழிற்படு நிகழ்ச்சி நிரல் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இறுதியாக, உரிய வேதனங்கள் மற்றும் தொழில் புரியும் மணித்தியாலங்களை ஆண் ,பெண் என்ற எவ்வித பாகுபாடுமின்றி பிரித்து வழங்கப்பட வேண்டும். தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அனைத்துலக பங்குதாரர்கள் போன்றோர் பெண் தொழிலாளர்கள் மத்தியில் அவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

'இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், இதற்கு முன்னர் அறிந்திராத பல விடயங்களை நான் அறிந்துகொண்டேன்' என வடக்கு மாகாணத்தின் பெண்கள் அமைப்பின் தலைவர் சிறிதரன் ஈஸ்வரி தெரிவித்தார். இவர் இந்த ஆய்வை மேற்கொள்ள உதவியிருந்தார். 'நாங்கள் அனைவரும் தொழிற்தளங்களில் இடம்பெறும் அநீதி மற்றும் சுரண்டல் தொடர்பாகக் கேள்விப்பட்டுள்ளோம்.

ஆனால் இது அதை விட ஆழமானதாக உள்ளது. தொழிற்தளங்களில் பெண் ஊழியர்களுக்கு எதிராக இடம்பெறும் பிரச்சினைகளை தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் தீர்க்க முடியும் என நானும் சக பெண்களும் நம்புகின்றோம்.

நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்' என சிறிதரன் ஈஸ்வரி தெரிவித்தார்.

வழிமூலம் - news.trust.org
ஆங்கிலத்தில் - TimothyRyan
மொழியாக்கம் - நித்தியபாரதி

இரும்பின் துருவை கவனிக்காது விட்டால் வலிமை வாய்ந்த தூணையே சாய்க்கும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தசரதர்கள் பலவீனமாக இருந்தால் இராமர்கள் காடு செல்வதே விதி

இலங்கையில் நடந்த இராம - இராவண யுத்தத்துக்கான அடித்தளம் சூர்ப்பனகை இராமரைக் கண்டதனாலோ இலட்சமணன் அவள் மூக்கை அரிந்ததனாலோ ஏற்பட்டதல்ல.

மாறாக கைகேயியின் இருவரக் கேட்பனவின் போதே சீதை சிறையிருப்பதும் இராமர் இலங்கை மீது படையெடுப்பதற்குமான கால்கோள் நடக்கலாயிற்று.

ஒரு சண்டையில் கைகேயி தனக்கு உதவியாக இருந்தாள் என்பதற்காக தசரதச் சக்கரவர்த்தி இருவரங்களைக் கேட்பதற்கு அனுமதி கொடுக்க, கைகேயியும் காலம் வரும் போது அந்த இருவரங்களையும் கேட்பதாகக் கூறினாள்.

இராமருக்கான பட்டாபிஷேக காலம் வந்தது. கூனி சூழ்ச்சி செய்தாள். கைகேயி தலைவிரி கோலத்துடன் இருக்கிறாள். அவளின் கோலம் கண்டு கதிகலங்கிய தசரதனிடம் கைகேயி இருவரங் களைக் கேட்கிறாள். பரதன் நாடாளுவதும் இராமன் காடேகுவதுமாக அந்த இருவரங்களும் அமைகின்றன.

வரம் என்பதே ஒரு பெரும் கிடைப்பனவு. ஒருவரின் வரம் இன்னொருவருக்கு தீங்காக அமையுமாக இருந்தால் அது வரமன்று.

எனினும் இந்தத் தத்துவத்தை கைகேயிக்கு உணர்த்தி; பிறர்க்குத் தீங்கில்லா வரம் கேள் என்று கூறும் திராணி தசரதருக்கு இருக்கவில்லை.

அதுதான் இல்லை என்றால், இராமபிரான் காடேகும் போது நானும் அவனுடன் காடு செல்கிறேன் என்று தசரதன் கூறியிருந்தால்கூட கைகேயி மனம் மாறியிருக்கலாம்.

பரதனை நாடாளச் செய்வது என்று முடிவு செய்த கைகேயியின் மனம் மாறுவதாவது என்று நீங்கள் பதிலுரைத்தால், பரவாயில்லை இராமரோடு தசரதன் காடு சென்றிருந்தால் இராமபிரானின் கைகளால் தசரதனின் அந்திமக் கிரியைகள் நடந்திருக்குமல்லவா? அதற்குக்கூட தசரதன் தகைமையற்றுப் போகுமளவில் தசரதனின் பலவீனம் இருந்துள்ளது என்பதே உண்மை.

இதை நாம் சொல்லும்போது தசரதன் மீது அபிமானம் கொண்டவர்கள் தசரதன் பலவீனமானவன் அன்று. அவனின் நல்ல குணமே பலவீனமாகத் தோன்றுகிறது என்று பதிலடி கொடுத்தால் அதை நாம் முற்றுமுழுதாக மறுப்பதற்கில்லை.

இருந்தும் ஒருவரின் நல்ல குணம் அழிவையும் துன்பத்தையும் ஏற்படுத்துமாக இருந்தால் அதை நல்ல குணம் என்றுரைப்பது முழுத்தவறு என்பதே நம் தாழ்மையான கருத்து.

எதுவாயினும் தசரதனின் நல்ல குணம் அல்லது எதையும் உறுதிபடத் தெரிவிக்காத தன்மை மற்றவர்களை எழுந்தாட வைக்கும். அந்த எழுந்தாடலில் கைகேயிகள் கோலோச்சுவர்; கூனிகளின் சூழ்ச்சிகள் வெற்றி காணும்; உத்தம புத்திரர்களாகிய இராமர்கள் காடு செல்வர்; சீதைகள் சிறையிருப்பர்; சடாயுகள் நீதி கேட்டு மாண்டு போவர்; எந்தப் பாவமும் அறியாத பரதர்கள் அவப் பெயர் பெறுவதுடன் பெற்ற தந்தைக்கும் அந்திமக்கிரியை செய்யும் தகைமையை இழப்பர் எனப் பெரியதொரு நீரோசை நடந்து போகும்.

அட இது எதற்கானது என்று நீங்கள் கேட்டால் எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் நல்லவர். எனினும் அவரின் அமைதி, நல்ல குணம், அடக்கம் என்பன பலவீனமாகப் பார்க்கப்படுவது போல தெரிகிறது.

வடக்கின் முதலமைச்சர் மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சரவையில் இருக்கக்கூடிய முக்கிய அமைச்சர்கள் குற்றம் சுமத்துவது, கூனிகள் சூழ்ச்சி செய்வது போன்றன வேதனை தருகிறது. எனவே ஜனாதிபதியின் முடிவுகளில் இறுக்கம் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆம், தசரதர்கள் பலவீனமாக இருந்தால் இராமர்கள்தான் காடேக வேண்டிவரும்.

# தேர்தலை நடத்தக்கோரி சாகும்வரை உண்ணாவிரதம்

## கூட்டு எதிர்க் கட்சியினர் முடிபு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தக்கோரி தேர்தல்கள் திணைக்களத்திற்கு முன்பாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை மாகாண சபை உறுப்பினர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த தேர்தலானது உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும், இல்லையேல் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் மேல் மாகாண சபையின் உறுப்பினர் சுனில் ஜயமன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள கூட்டு எதிர்க்கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சார்ந்த குழு இதுவரை 3 கூட்டுறவுத் தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்துள்ளதாகவும், இவர்கள் எதிர்வரும தேர்தல்களை குழப்புவதற்கு தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஜமைக்காவை தாக்கிவிட்டு ஹேய்ட்டியை நோக்கி நகர்ந்து செல்லும் மாத்யூ சூறாவளி

மிக சக்தி வாய்ந்த அட்லாண்டிக் சூறாவளிகளில் ஒன்று கரிபியன் பகுதியை கடந்து கொண்டிருக்கிறது.

ஜமைக்காவின் பல பகுதிகள் ஏற்கனவே மழை மற்றும் பலமான காற்று காரணமாக தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

ஜமைக்காவின் தலைநகர் கிங்ஸ்டனில் உள்ள சாலைகளில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

ஹேய்ட்டியிலும் சூறாவளி எச்சரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

ஜமைக்காவைவிட அதிக ஆபத்தை ஹேய்ட்டி எதிர்கொள்ளும் என கூறப்படுகிறது.

போதுமான உணவு மற்றும் தண்ணீரை சேகரித்து வைக்கவும், வீடுகளை பாதுகாககவும்ஹேய்ட்டியில்உள்ள பொதுமக்களை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரிய நிலநடுக்கத்தை தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஹேய்ட்டி மக்கள் இன்னும் கூடாரங்களில வாழ்ந்து வருகின்றனர்.

மாத்யூ சூறாவளி கிழக்கு கியூபாவை தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.(இ-7)

# தொழிலாளர் பிரச்சினையில் இணைந்து செயற்படத்தயார்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

அனைத்து தொழிற்சங்கங்களும் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை ஓரம் கட்டி வைத்துவிட்டு ஒன்று சேர்ந்து கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுத்தால் மாத்திரமே தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியும், அதற்கு யார் அழைப்பு விடுத்தாலும் நாங்கள் அவர்களுடன இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதா கிருஷ்ணன்தெரிவித்துள்ளார்.

அம்பேகமுவ பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று அம்பேகமுவ பிரதேச செயலாளர் காரியாலயத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை தொடர்பாக இந்த கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அதற்குபதிலளித்தஇணைத் தலைவர்களில் ஒருவரும் கல்வி இராஜாங்க அமைசசருமான வேலுசாமி இராதா கிருஷ்ணன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரம் எல்லா தொழிற்சங்கங்களுக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாகும் இதனை தீர்க்க வேண்டுமானால் அனைத்து தொழிற்சங்கங்களும் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை ஓரம் கட்டி வைத்துவிட்டு தொழிலாளர்களின் நலன் கருதி ஏன் ஒன்றுபட்டு செயற்படக்கூடாது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு புறம் இருக்கின்றது. இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் ஒரு புறம் இருக்கின்றது. நாங்கள் முற்போக்கு கூட்டணியில் மூன்று தொழிற்சங்கங்கள் ஒரு புறம் இருக்கின்றோம். இது பெருந்தோட்ட கம்பனிகளுக்கு ஒரு சாதகமாக மாறியிருக்கின்றது.

எனவே நாங்கள் தொழிலாளர்களின் நலன் கருதி ஒன்றுபடுவோம். அதற்கு நான் தயாராக இருக்கின்றேன். இதற்கான அழைப்பு யார் விடுத்தாலும் அவர்களுடன் இணைந்து செயற்பட நாங்கள் தயாராக இருக்கின்றோம். தொழிற்சங்கங்கள் உண்மையிலேயே தொழிலாளர்களின் நலன் சார்ந்து செயற்படுவதாக இருந்தால் எங்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையும் எமது விடாப்பிடியையும் விட்டுவிட்டு ஒன்றுபட வேண்டும்.


ஒரு காலத்தில் முதலாளிமார் சம்மேளனம் வேலை நிறுத்தம் என்றால் அதற்கு பயப்படுவார்கள். ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது.

தொழிலாளர்கள் வீதியில் இறங்கி போராடுகின்றார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். நாங்கள்இங்கு ஒவ்வொருவரும் பிரிந்து நிற்கின்றோம் என்றே கூற வேண்டும். எனவே நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்" என தெரிவித்த கருத்து ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச்சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா, வடக்கு அல்லாரை, வெள்ளாம் போக்கட்டி, பாலாவி, கெற்பலி, அச்செழு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பெரியார்குளம் (பூந்தோட்டம்), குட்செட் வீதி, தோணிக்கல் சிவன் கோவில பிரதேசம், மடுக்கந்த பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ பெரிய செயல்களைப் பெருந்தியாகத்தால் மட்டுமே செய்யமுடியும். உலகப் பொதுவான தன்மை என்னும் அந்த ஒரே கருத்திற்காக தேவையானால் அனைத்தையும் தியாகம் செய்யவேண்டும்.


❖ பிறருக்கு முக்தியை வழங்குவதற்காக நீ நரகத்திற்குச் செல். என்னுடைய சொந்த முக்தியென ஒன்றும் இங்கு இல்லை.

❖ பிறர்க்கென எல்லாவற்றையும் தியாகம் செய்பவனுக்கே முக்தி கிடைக்கும். எனது முக்தி என ஓயாது பல்லவி பாடி இரவும் பகலும் தம் மூளையை அலுக்கச் செய்யும் பிறரோ தற்கால உண்மை நன்மையையும் பிற்கால முன்னேற்றத்தையும் அழித்தவாறே அங்கும் இங்கும் அலைவர். பலமுறை இதை நான் கண்டதுண்டு.

❖ ஒன்றையும் கேளாதே. எதையும் பதிலாக விரும்பாதே. கொடுக்க வேண்டியிருப்பதைக் கொடு. அது உன்னையே திரும்ப அடையும். ஆனால் அதைப்பற்றி இப்போது நினைக்காதே. அது ஆயிரம் மடங்காகப் பெருகி உன்னிடம் திரும்பும். ஆனால் அதில் கவனத்தைச் செலுத்துதல் கூடாது. கொடுக்கும் சக்தி உன்னிடம் உள்ளது.ஆதலால் கொடு. அதோடு நின்று விடு.

# வடமாகாண வல்லவன் உதைபந்தாட்டத் தொடர் குருநகர் பாடுமீனை வீழ்த்தியது சென்.அன்ரனிஸ்









நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட சமரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மின் ஒளியில் இடம்பெறும் சுப்பர் 8 சுற்றின் முதலாவது லீக் போட்டியில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வி.க. எதிர்த்து குருநகர் பாடுமீன் வி.க. மோதியது.

முதற்பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய சென்.அன்ரனிஸ் 32 ஆவது நிமிடத்தில் றஜித் முதலாவது கோலினை பதிவு செய்தார்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆட்டத்திலும் 53 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் வீரர் கலிஸ்ரர் அதிரடியாக மேலும் ஒரு கோலினை பதிவு செய்ய தொடர்ந்த அனல் பறந்த ஆட்டத்தில் பதிலுக்கு 67 ஆவது நிமிடத்தில் பாடுமீன் வீரர் மயூரன் ஒரு கோலினை உட்செலுத்த மேலும் ஆட்டம் விறுவிறுப்பாகியது. தொடர்ந்த ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் வி.க.வீரர் கலிஸ்ரார் (பவா) மீண்டும் ஒரு கோலினை அதிரடியாக உட்செலுத்த ஆட்டம் சென்.அன்ரனிஸ் பக்கம் சாய்ந்தது.

தொடர்ந்தும் பாடுமீன் கோலினை போட முயற்சித்த போதும் சென்.அன்ரனிஸ் பின்கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தினால் 3:1 என்ற கோல் கணக்கில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக கலிஸ்ரர் (பவா) தெரிவு செய்யப்பட்டதுடன் அணிக்கான பரிசினை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முகாமையாளர் த.சற்குணராஜா வழங்கி கௌரவிக்க சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கந்தசாமி அவர்கள் பதக்கத்தினை அணிவித்தார்.(க)

## இன்றைய போட்டிகள்

யாழ்.லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட போட்டியில் இன்று நடைபெறவுள்ள போட்டியில் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.லூசியஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)



தந்தை செல்வா விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட அணிக்கு ஆறுபேர் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் 02.10.2016 நடைபெற்ற இறுதிப் போட்டியில் முரசொலி அணி வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது. வெற்றி பெற்ற அவ் அணியினை படத்தில் காணலாம்.

## வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது கரவெட்டி ஞானம்ஸ் அணி



குருநகர் புனித சார்ள்ஸ் மகா வித்தியாலயத்தின் 140 ஆவது நிறைவையொட்டி பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அரையிறுதியில் இணுவில் கலையொளி அணியையும் இறுதிப்போட்டியில் குருநகர் sea stars அணியையும் வெற்றி கொண்டு வெற்றிக்கிண்ணத்துடன் 15.000 ரூபாய் பணப்பரிசிலையும் தனதாக்கியது கரவெட்டி ஞானம்ஸ்.

## மோகன் - கணேஷ் ஞாபகார்த்த கிரிக்கெட் விவேகானந்தா அரையிறுதிக்கு முன்னேற்றம்



காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் மோகன்-கணேஷ் ஞாபகார்த்த கிண்ண கடினப்பந்து கிரிக்கெட் போட்டியில் காலிறுதிப்தகர்த்தெறிந்து அரை இறுதிபோட்டிக்கு விவேகானந்தா விளையாட்டுக்கழகம் முன்னேறியுள்ளது.

மேற்படி போட்டியானது (02.10. 2016) காரைதீவு கனகரட்ணம் மைதானத்தில் சம்மாந்துறை முபோ விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விவேகானந்தா விளையாட்டுக்கழகம் 120 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்தது. இதில் டினஸ்ரன் 26 ஓட்டங்களையும் கஜேந்திரா 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முபோ விளையாட்டுக்கழகம் 113 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் பிரகாசித்த இளம் வீரர் டினஸ்ரன் பந்து வீசிலும் 4 விக்கெட்டுகளைப் பெற்று கொடுத்து வெற்றிக்கு பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளார். (க)

## 3ம் இடத்தினை தனதாக்கியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி



பொலிகை பாரதி உதைபந்தாட்ட தொடரின் 01.10.2016 அன்று இடம் பெற்ற 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் போடாத நிலையில் முதல் பாதியாட்டம் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தின் 30 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் வீரர் சங்கர் அணியின் வெற்றிக் கோலை போட்டார். இறுதி ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் அணியை வீழ்த்தியது நவஜீவன்ஸ் அணி. (க)

## பெயர் பலகைகளை...

தான் பதில் அளிக்கத் தீர்மானித்ததாகவும் நேற்று பிற்பகல் பொலநறுவை, திம்புலாகல, நுவரகல, சுகலாதேவிகம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த அரசாங்கங்கள் ஆரம்பித்து இடைநடுவில் நிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அவற்றை முன்னெடுத்துச் செல்வது அரசின் பொறுப்பாகும். அத்துடன் வேலைகள் முடிவடைந்த திட்டங்களை திறந்து வைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி கூறினார்.

2016 உலக குடியிருப்புத்தினத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி "அனைவருக்கும் புகலிடம்" தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சுகலாதேவிகம மாதிரிக் கிராமம் நேற்று ஜனாதிபதியினால் மக்களிடம் கையளிக்கப்பட்டது. அதனோடு இணைந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் பெறுமதி 33 கோடி ரூபாய் ஆகும்.

2017 ஆம் ஆண்டு இந்த நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக வீடமைப்பு நிர்மாணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் அடங்கிய முன்மொழிவுகளை இன்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டை விடவும் வீடமைப்பு, நிர்மாணம் தொடர்பில் மாற்றம் ஏற்படுத்தும் ஆண்டாக 2017ஐ மாற்றுவதாக கூறிய ஜனாதிபதி அதற்கு அனைத்துத் தரப்புகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார் (செ-11)

## வெளிநாடு பயணிக்க...

சுமார் 11.4 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக பிணை வழங்கிய போது முன்னாள் பாதுகாப்பு செயலாளரின் வெளிநாட்டுப் பயணங்களை முடக்க நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்று நீதிமன்றம் முன் ஆஜரான முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்பு தொடர்பாக சீனா செல்ல அனுமதி தருமாறு நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதன்படி ஐம்பது லட்சம் ரூபாய் சரீரப் பிணையின் கீழ் நாளை 5ஆம் திகதி தொடக்கம் 30-ஆம் திகதி வரையிலான காலப பகுதிக்குள் வெளிநாடு செல்ல கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நீதிபதி அனுமதி வழங்கினார். (செ-11)

## நான் ஜனாதிபதியாக...

யில் கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற எழுக தமிழ் பேரணி தொடர்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,

அரசியலில் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள வட மாகாண முதலமைச்சர் மக்கள் மத்தியில் தனது அரசியல் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகவே எழுகத் தமிழ் பேரணியை நடத்தியிருக்கின்றார். வட மாகாண முதலமைச்சர் மற்றும் எழுக தமிழ் பேரணியை நடத்திய தலைவர்கள் இனவாதத்தை கக்கிய போதிலும், அதில் கலந்துகொண்ட மக்கள், தமது அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு கோரியே ஈடுபட்டிருந்தனர். இந்த சூழலில் நான் ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்திருந்தால் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட எழுக தமிழ் போன்ற இனவாத பேரணிக்கு இடமளித்திருக்க மாட்டேன்.

தற்போதைய மைத்திரி - ரணில் தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்ட மகிந்த, வடக்கு முதலமைச்சரைக் கொண்டு எழுக தமிழ் பேரணி என்ற பெயரில் ஒரு சதித்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றியிருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். (செ-11)

## தமிழர்களுக்கு...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் சுவிட்சர்லாந்தின் நீதி அமைச்சர் சைமனேட்டா சொமாருகா யாழ்ப்பாணத்திற்கு நேற்று திங்கட்கிழமை வருகைதந்திருந்தார். இந்த வருகையின் போது வடமாகாண முதலமைச்சரை முதலமைச்சர் செயலகத்தில் காலை பத்து மணியளவில் அவர் சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பிற்கு பின்னர் முதலமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு கருத்துரைத்தார்.

முதலமைச்சர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்கள் பேரவையானது எதிர்க்கட்சியாக செயற்படுவதாக தென்பகுதியில் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் அது எதிர்க்கட்சி அல்ல. தமிழ் மக்களின் தேவைகள் விருப்பங்கள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு எடுத்துரைப்பதற்காகவே மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு சிவில் அமைப்பாகும். ஏனெனில் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.

அவர்கள் தமது தேவைகள் விருப்பங்கள மற்றும் அபிலாஷைகள் தொடர்பாக தெரிவிப்பதற்கு கடந்த ஆட்சியில் இராணுவத்தினாலும் ஆயுதக்குழுக்களாலும் தமிழ் மக்களின் வாய்கள் மூடப்பட்டிருந்தன. இது அரசியல் நகர்வில் முக்கியமான ஓர் விடயம் ஏனெனில் தமிழ் மக்களது மனங்களில் உள்ளவற்றை எடுத்துக்கூற வேண்டிய அவசியமுள்ளது. மேலும் நாட்டில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய ஆட்சியானது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுடைய ஆதரவுடனேயே ஏற்படுத்தப்பட்டது.

ஆனாலும் இன்னமும் தமிழ் மக்களது பிரச்சினைகள் முற்றாக தீர்க்கப்படவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல போனவர்கள் விடயம் இவை தீர்க்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டமானது விரைந்து நீக்கப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாகவே நாட்டில் மக்களிடையே நல்லாட்சியினை ஏற்படுத்த முடியும். எனினும் மாறிமாறி ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை அரசாங்கங்கள் இனப்பாகுபாடுகளைத் தொடர்ந்து வந்தது. 1948ஆம் ஆண்டு வரை பிரித்தானியர்களின் ஆட்சியில் நாம் சகலரும் சமமாக நடத்தப்பட்டோம்.

ஆனால் 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் இனரீதியான பாகுபாடு ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்தான கல்வி தரப்படுத்தல்களால் தமிழ் மாணவர்கள் பலர் பல்கலைக் கழகங்களுக்குச் செல்ல முடியாது போனது. இவ்வாறான பாகுபாடுகள் இன்னும் தொடர்கின்றன. இந்த பின்னணியில் கொண்டுவரப்படக்கூடிய அரசியலமைப்பானது தமிழ் மக்களுக்கு நன்மையளிக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது என சுவிட்சர்லாந்து அமைச்சரிடம் தான் தெரிவித்திருந்ததாக முதலமைச்சர் கூறினார். (செ-4)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.சுப்பையா சண்முககுமார்
(BA, Dip.in.Ed.MEd)

எமது நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்,
கோண்டாவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின்
அதிபராக கடமையாற்றி யாழ்ப்பாணக் கோட்டக்
கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று
சிறந்த சேவையாற்றி இன்று பணியில்
இருந்து ஓய்வுபெற்று மணிவிழாக் காணும்
உயர்திரு சு.சண்முககுமார் அவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும்
அதிபர்களும்

(வ-5982)


North Lanka IIT

Master of Philosophy [M.Phil.]

பட்டதாரி கற்கைநெறியை நிறைவு செய்த சகலருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
முதுதத்துவமானி [M.Phil.]
காலம் : 2 - 3 Years
பாடங்கள்:
பொருளியல் , அரசியல் விஞ்ஞானம் , தமிழ்,
ஆங்கிலம் , IT , இந்து நாகரிகம் , கிரிஸ்தவ நாகரிகம்,
இஸ்லாமிய நாகரிகம் , வரலாறு.
ஆகிய பாடங்களில் முதுதத்துவமானி கற்கைநெறிகளுக்கு
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
*மானிய ஆணைக்குழு அங்கிகாரம்
*உள்ளூர் பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள் வழிகாட்டி
விண்ணப்பத்தை சுயமாகத் தயாரித்து 08/10/2016
முன்பதாக அனுப்பி வைக்கவும்
நேர்முகப்பரீட்சைக்கு 09/10/2016
காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும்
மேலதிக தொடர்புகளுக்கு : Dr.B.Thanabalan
0770681958

Diploma in IT

சகல அரச உத்தியோகத்தர்களின் பதவி
உயர்வுக்குமான Diploma in IT கற்கைநெறி
காலம் : 9-12 மாதங்கள்
வகுப்புகள் யாவும் வார நாட்களில்
மாலையில் நடைபெறும்
சுயமாகத் தயாரித்த விண்ணப்படிவத்தை 08/10/2016
முன்பதாக சமர்ப்பிக்கவும்
விரிவுரைகள் யாவும் விஜயதசமி
அன்று ஆரம்பமாகும்
மேலதிக தொடர்புகளுக்கு:
Mr.S.Mugunthan Reading Ph.D. - 0777880330
Director - 0767504535

(வ-5981)

People's Bank Bulilding, Top Floor,
Stanly Road, Jaffna.

## நீங்கள் தொழில் தேடுபவரா?

முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L உடன் Diploma in Hotel Management

CERTIFICATE - DIPLOMA - DEGREE

With FREE English Course

Up to 30% Discount

* பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
* கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு

(A-5978)

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு 077 3616 798

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

SIKARAM ACADEMY Business · Hospitality · English SCHOOL of HOSPITALITY

இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.



## வாடகைக்கு

சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள 10x25 விஸ்தீரணமுள்ள இரண்டுகடைகள்வாடகைக்குஉண்டு.

(6023) தொடர்புகளுக்கு :- 0775360745


# பெயர் குறிப்பி...

க்கிழமை வழங்கப்பட்டுள்ளது.


## தேவை

தொலைக்காட்சி நிறுவனத்திற்கு செய்தி வாசிப்பவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு :- 622, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

077 0098 336

தமிழிலும், சமயத்திலும் ஆர்வமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (6114)



## V2 TRAVELS



குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

(C-5950)

தொடர்புகளுக்கு: 0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


அந்த வகையில் 23 பேரில் ஒருவரான கங்காதரன் என்பவருக்கு எதிராக சாட்டப்பட்ட 2 குற்றங்களுக்கும் தலா ஒவ்வொரு வருடமாக 2 வருடங்களும் 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது. தண்டப்பணம் கட்டத்தவறும் பட்சத்தில் 3 மாத சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நபரான நகுலராஜா என்பவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் ஒருவருடம் புனர்வாழ்வும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நபர்கள் கடந்த 8 வருடங்களுக்கு மேலாக தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையாலும் விடுதலை தொடர்பில் எவ்வித அறிவிப்பும் வழங்கப்படாமையால் தண்டனை பெற்று விடுதலையாக முன்வந்துள்ளார்கள் என அவர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி ஆனோல்ட் பிரியந்தன் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 23 பேருக்கு 6 மாதம் காலம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சால் அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மேற்குறித்த இரு நபர்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமை ஏனைய கைதிகள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.(செ-9)


## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(6102) M.Suren



## CIMA strategic Level
commencing on 05th October
## ACCA Knowledge Level
commencing on 22nd October

for details :

Call - 021 722 3444



MayZone College The Capstone of Success

May Zone College The Capston of success

No.61- 3rd Floor Palaly Road, Jaffna.

(C-5979)



## கணக்காளர்கள் / பயிலுநர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல லண்டன் Chartered Accountants அலுவலகத்துக்கு கணக்காளர்கள் உடனடியாகத்தேவை. விண்ணப்ப முடிவுத்திகதி :- 10th October 2016.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

### தகைமைகள் :-

* Accounting Graduates.
* HNDA or AAT qualifiers
* CIMA, ACCA and Chartered students & members
* Experience with accounting software packages, good communication skills and a good command of English will be an added advantage.

Please forward CVs for appointments :

(6119)

(Apply.jobs.jaffna@gmail.com)


# இரா...

எவ்வாறானது என ஊடகங்கள் வினவிய போதே பாதுகாப்பு ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் செனவிரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(செ-11)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



## காசி யாத்திரையும், காட்மாண்டு, நேப்பாள் யாத்திரையும்

ஆரம்பம் : 15.11.2016 - யாத்திரீகர் : 15 - நாள்கள் : 14

### தரிசிக்குமிடங்கள் சுருக்கமாக விபரங்களைக் கேட்டு அறிக!

காசி விஸ்வநாதர் உட்பட காசியில் 15 இடங்கள், காயாவில் பிதிர்க்கடன்கள் செய்வது, புத்தகாயாவில் 5 இடங்கள், அலகபார்த்தில் (கங்கா,ஜமுனா, சரஸ்வதி சங்கீமம்) உட்பட 5 இடங்கள், இராமேஸ்வரத்தில் 5 இடங்கள், மதுரை மீனாட்சி, ஆக்ராவில் (தாஜ்மகால், செங்கோட்டை, காட்மாண்டு) நேப்பாளில் பசுபதிநாதர், சங்கு நாராயணர், ஆஞ்சநேயர்,சுயம்புநாதம், மாயாதேவி கோயில்கள் உட்பட 20 இடங்களும் டெல்லியில் அட்ஷய தாம் (நாராயணர் கோயில் உட்பட) வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாயிற்கு எமது சேவை :

5 விமானப் பயணங்கள், ஏனைய பயணங்கள் , A/C பஸ், உணவு, மடப்பள்ளி, சமையல் ஆட்கள், சமைத்த சுத்தமான சைவ உணவு, மூன்று வேளை காப்பி, ரீ, குடிநீர், தரமான இரண்டு பேருக்கு குளியலறை இணைந்த அறைகள், பூசகர்களும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுடையவர்கள் பாஸ்போட் போட்டோக்கொப்பி ஒன்றும் சிறிய கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்க!

மேல் விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11
தொ.பே : 077 768 0102 / 077 736 2154
Facebook : sridevisriranganathan.thuraiappa

(B-5974)



## விஜயதசமியை முன்னிட்டு
## புதிய AAT பிரிவுகள் ஆரம்பம்

Level - 3, Level - 2, Level - 1

ஆகிய வகுப்புக்கள் 11.10.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

K-AIMS Business School
148 2/1, K.K.S Road, Jaffna.
T.P : 076 826 8206 - 076 826 8205

(C-5972)



## விஜயதசமியை முன்னிட்டு CA Sri Lanka புதிய பிரிவுகள் ஆரம்பம்

KE1, KE2, KE3, KE4, KE5

தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

ஆகிய வகுப்புக்கள் 11.10.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

K-AIMS Business School
148 2/1, K.K.S Road, Jaffna.
T.P : 076 826 8206 - 076 826 8209

(C-5972)



## அன்னை முத்துமாரி பஸ்சேவை
Annai Muthumari

சகல நாடுகளுக்குமான சர்வதேச விமானப்பயணச் சீட்டுக்களை எமது சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.



கொழும்பு - யாழ்ப்பாணம் - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை புதிய நான்கு A/C பஸ்களுடன் இருவழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது.

வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டைபெற்றுக் கொள்ளலாம்

| காலை (புறப்படும் நேரம்) | | மாலை (புறப்படும் நேரம்) | |
|---|---|---|---|
| பருத்தித்துறை | 9.00 am | பருத்தித்துறை | 7.00 pm |
| யாழ்ப்பாணம் | 10.00 am | யாழ்ப்பாணம் | 8.00 pm |
| வெள்ளவத்தை | 9.00 am | வெள்ளவத்தை | 7.00 pm |
| கொட்டாஞ்சேனை | 10.00 am | கொட்டாஞ்சேனை | 8.00 pm |

யாழ்ப்பாணம் 077 544 8509
கொழும்பு 077 544 9251
வல்வெட்டித்துறை 077 544 7359
நெல்லியடி 077 285 0285



JETEX
SRILANKA'S FASTEST SERVICE MALL
உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள், பொதிகள் துரித கதியில் அனுப்பிட இன்றே நாடுங்கள்.

133, (A9) கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:- 021 221 6773 | 077 544 8503

நெடியகாடு பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டித்துறை. தொ.பே.இல:- 021 221 6773 | 077 544 7359

208A, காலி வீதி (றோயல் பேக்கரி அருகாமை), வெள்ளவத்தை. தொ.பே. இல:- 011 236 1766 || 077 544 9251

(6035)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.